
ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

சமய – சமூக – இலக்கிய வெளியீடு

ஆரம்பம் 1969 பெப்ரவரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

ஆகஸ்ட் - 2014

மலர் - 46 இதழ் - 07

• **ஆசிரியர்**
லெஸ்லி ஜெயகாந்தன்

• **இணை ஆசிரியர்**
மலர்வேந்தன்

• **துணை ஆசிரியர்கள்**
மெற்றில்டா இராஜேந்திரம்
பெஸ்லீயோ வாஸ்
பைந்தமிழ்க்குமரன் டேவிட்

• **ஆலோசகர்**
A.G.இராஜேந்திரம்

• **கணினி வடிவமைப்பு**
சுபாஜெனி சங்கர்

• **வெளியீடு**
சமூகத் தொடர்பு நிலையம்.
மட்டக்களப்பு மறை மாவட்டம்

• **முகவரி**
சமூகத் தொடர்பு நிலையம்
அ.பெ.எண் - 44
மட்டக்களப்பு.

• **பதிப்பகம்**
வணசிங்கா அச்சகம்
மட்டக்களப்பு.


## உள்ளே....


| | |
|---|---|
| அன்புடன் உங்களோடு | 01 |
| கடவுளின் அன்பின் வெளி | 02 |
| நடந்து முடிந்த உலகக் | 04 |
| நவீன தமிழ் இலக்கியத்தில் | 05 |
| பழக்கதோஷம் | 07 |
| உலகத் தொடர்பு தினம் | 08 |
| கற்களாடும் பந்தயம் | 10 |
| பாடசாலை விளையாட்டுப் | 11 |
| எண்ணிப்பார்க்கையில் | 13 |
| தொண்டனின் சில நிமிட | 14 |
| வீட்டு வைத்தியம் | 16 |
| வரலாற்றில் மனித உரிமை | 18 |
| இலக்கிய மஞ்சரி | 20 |
| இரத்த நிலம் | 21 |
| கடுகுக் கதை | 24 |
| புனிதர்களை அறிவோம் | 25 |
| விவிலியம் கற்போம் | 27 |
| அறிவை வளர்ப்போம் | 28 |



ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்)



SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486
E.mail: scctribatti@gmail.com



விலை : 40/=
ஆண்டு சந்தா : 450/=
(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்புடன் உங்களோடு ...!

'**பரிவு**' என்ற வார்த்தையானது (Compossion) உடன் துன்புறுதல் என்ற அர்த்தம் கொண்டது. மற்றவர்கள் துன்பப்படும் போதும் வேதனைப்படும் போதும் அந்தத் துன்பத்தையும் வேதனையையும் நமக்குள் உணர்வதே பரிவு.

மக்களின் வேதனையை இயேசு தன் உள்ளத்திலும் உடலிலும் உணர்ந்தார்.

"மெய்யாகவே அவர் தம் பிணிகளைத் தாங்கிக் கொண்டார். நம் துன்பங்களைச் சுமந்து கொண்டார்" (எசாயா 53:4) என்று எசாயா இறைவாக்கினர் கூறுவது இதைக் குறித்தே. இத்தகைய பரிவுள்ளம் கொண்டவர்களாக வாழ்கின்றோமா என்ற கேள்வியை எழுப்ப இன்று நாம் அழைக்கப்படுகின்றோம். எங்கு பரிவு அதாவது உடன் துன்புறுதல் இருக்கின்றதோ அங்கு பிறருக்கு உதவியும் சேவையும் செய்யும் மனப்பக்குவமும் தானே வந்து விடும்.

அன்னை தெரேசா கல்கத்தாவிலுள்ள குப்பை மேடுகள், கான்களிலுள்ள கைவிடப்பட்ட குழந்தைகள், அனாதைகள் எல்லோர் மீதும் பரிவு கொண்டு நீங்காத இடத்தினை உலகிலே பெற்றுக்கொண்டார்.

**"கருணையின் மூலம் கடவுளைக் காணலாம், பரிவின் மூலம் படைத்தவரைக் காணலாம்"**

இன்று பரிவு, இரக்கம் என்பன கேள்விக் குறியாகிவிட்டது. பரிவு இருந்தால்தான் பகிரமுடியும். இன்று பகிரும் மனம் யாரிடம் இருக்கின்றது? ஒரு புள்ளி விபரம் இவ்வாறு கூறுகின்றது.

"உலகில் 3 பெரும் பணக்காரர்களின் சொத்து 48 நாடுகளின் சொத்தைவிட அதிகம், 32 தனிநபர்களின் ஆண்டு வருமானம் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், நேபாளம், ஈரான், ஆப்கானிஸ்தான், இந்தோனேசியா ஆகிய நாடுகளின் ஆண்டு வருமானத்தை விட அதிகம் என்றும், 358 பேரின் சொத்து 250 கோடி மக்களின் சொத்தை விட அதிகம் எனவும் கூறப்படுகின்றது.

பரந்த இவ்வுலகில் எல்லோருக்கும் போதுமானது உள்ளது. தன்னல மனப்பான்மையினால் பலர் பசியும் பட்டினியுமாக வாழ்கின்றனர். மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டிருக்கும் யுத்தத்தால் 50% சிறுவர்கள் உணவின்றி இறக்கும் அபாயத்தில் உள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. மனிதனாகப் பிறப்பது ஒரு விபத்து, மனிதனாக வாழ்வது ஒரு சாதனை. அடுத்தவரைப் பற்றி அக்கறை கொண்டு மனித நேயத்தோடு நாம் வாழவேண்டும்.

இம்மாதம் நாம் அன்னை மரியாளின் விண்ணேற்புப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அன்னை மரியாள் இரக்கமுள்ளவளாக, பரிவுள்ளவளாக இப்புவியிலே வாழ்ந்தாள். அதனால்தான் இன்று எம் அனைவருக்கும் அன்னையாகத் திகழ்கின்றாள். இன்று ஆட்சியாளர்களிடம் இரக்கம், கருணை, பரிவு உள்ளதா? மக்களைச் சுரண்டி ஏப்பம் விடும் ஓநாய்கள் போல் நாட்டுத் தலைவர்கள் செயற்படுகின்றார்கள். இந்நிலை மாறவேண்டும். மனிதனை மனிதன் மதிப்பது இறைவனை மதிப்பதாகும். மனிதனை மனிதன் மிதிப்பது இறைவனை மிதிப்பதாகும்.

இறைவழிபாடு மனித நேயத்தை வளர்க்க வேண்டும். மனித நேயத்தை வளர்க்காத இறை வழிபாடு வடிகட்டிய சிலை வழிபாடு.

"என்றுமே தோல்வியுறாத ஒரே முதலீடு, நன்மைத்தனம் மட்டுமே!" என்கிறார் ஹென்றி டேவிட் தோரே என்பவர். நாமும் நன்மைசெய்து நல்லவர்களாக வாழ்வோம்.

ஆசிரியர்

**இறைவாக்கு**

**"உன்மீது அன்பு கூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக"** (லூக்கா 10:27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடவுளின் அன்பின் வெளிப்பாடு அன்னை மரியாவின் விண்ணேற்பு!

அன்னை மரியா உடலோடும் உயிரோடும் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பெருவிழாவை திருச்சபை இம்மாதம் 15ம் நாள் கொண்டாடுகிறது.

கடவுளால் தமது மாபெரும் மீட்புத் திட்டத்திற்காக முன் குறித்துவைக்கப்பட்ட மரியாவை,

மிகத் தூயவரான திருக்குமரன் இயேசுவின் பிறப்பிற்காகக் குற்றமின்றி உற்பவிக்கப்பட்டவர் என்று நம்பப்படும் தாயை, கடவுளின் திருமகனை கருவிலே தாங்கி அவர் உறையும் பேழையாக - கோயிலாகக் கொண்டாடப்படும் அன்னையை, அவரது மாபெரும் மீட்புப் பணியிலே துணை நின்று தன்னை அர்ப்பணித்த மரியாவை கடவுள் அழிவுற விடாது ஊனோடும் உயிரோடும் தம்மிடம் எடுத்துக்கொண்டார் என்று திருச்சபை உறுதியாக நம்புகிறது - போதிக் கிறது: அவளுக்குப் பெருவிழா எடுத்துப் புகழ்பாடுகிறது.

கடவுள் அன்பால் நிகழ்த்திய மானுட மீட்பு எனும் மாபெரும் செயலில் ஒப்பிட முடியாத ஒரு பாத்திரமாக விளங்குபவர் அன்னை மரியா. அவரது இடத்தை நிரப்பக்கூடிய ஒருவர் இருக்கவே முடியாது. ஒரு மனிதனது தாயின் இடத்தை நிரப்பக்கூடியவர் தரணியில் இல்லை என்பது பொதுவழக்கு. அதுசரி எனில், உலகின் தாயாக, இறைமகனின் தாயாக விளங்கும் அன்னை மரியாவின் இடத்தை நிரப்பவல்லார் யார்? இந்த உயர்வின் உச்சம்தான் அவரது விண்ணேற்பு. மரியா இந்த உச்சத்தைத் தொடக் காரணமாக இருந்தது எது? அது கடவுளின் அன்பா? அல்லது அன்னை மரியாவின் அன்பும், தாழ்ச்சியும், அர்ப்பணிப்பும் நிறைந்த வாழ்வா? இது ஒரு பட்டிமன்றத்துக்கான வினாபோல் இருந்தாலும் எண்ணிப்பார்க்க வேண்டிய வினாவாகும்.



எங்கும் நிறைந்த மகாசக்தியான கடவுள் விண்ணகத்தில் வீற்றிருக்கிறார் என்பதும், அங்கிருந்து இறங்கிவருகிறார் என்பதும், தாம் தெரிந்துகொள்பவரை விண்ணகத் துள் எடுத்துக்கொள்கிறார் என்பதும். மானுடம் தனக்கூடாகக் கடவுளைப் புரிந்துகொண்டு விளக்கும் வர்ண னைகளின் பாரம்பரிய நீட்சியா கும்.

கடவுளின் முன்னால் வெறும் தூசாக, துரும்பாகக் கூட இல்லாத மனிதன் கடவுளின் அளவில்லா அன்பையும் இரக்கத்தையும் மனித வாழ்வில் அவர் புரியும் மாபெ ரும் செயல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ளையும் புரிந்துகொள்ள, வெளிப்படுத்த மனித இயல்புக்கு, நம்பிக்கைக்குப் பொருத்தமான இத்தகைய வர்ணனைகளும், சொல்லாடல் களும் தேவைப்படுவது இயல்பானதுதான்.

கடவுள் எனும் மாபெரும் அன்புச் சக்திக்கு முன்னால் தனது வெறுமையை நினைந்து பக்தன் உருகியிருக்கிறான்.



**அன்பைப் பெருக்கி என் ஆருயிரைக்**
**காக்க வந்த**
**இன்பப் பெருக்கே என் இறையே**
**பராபரமே**
**தன்னைத் தந்து என்னைத் தடுத்து**
**ஆட்கொண்ட நின் கருணைக்கு**
**என்னைத் தந்து என்னபயன் எந்தாய்**
**பராபரமே**

என்று இறைவனது பேரன்பையும் தனது ஒன்றுமில்லாமையையும் கூறி உருகும் தாயுமானவரும்,

**நிலந்தன் மேல் வந்தருளி நீள் கழல்கள் காட்டி**
**நாயிற்கடையாய்க் கிடந்த வடியேற்கு**
**தாயிற் சிறந்த தயாவான தத்துவனே**

என்று மாணிக்கவாசகரும் உருகுவது இறைவன் என்னும் அந்த மகாசக்தியின் பேரன்பை உணர்ந்தல்லவா...?

**'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே'**
என்னும் மாணிக்கவாசகரின் வரிகளில்....
**பெற்றதாய் மகனை மறந்தாலும்**
**நானுனை மறக்க மாட்டேன்**

என்னும் விவிலிய வரிகள் வந்து ஒட்டிக்கொள்ளுகின்றன.

இவ்வாறு பக்தரும் பாவலரும் தாம் அனுபவித்துணர்ந்த கடவுளின் அளவில்லா அன்பையே தமது அனுபவம், நம்பிக்கை, மொழி, ஆற்றல் என்பவற்றுக்கேற்ப எடுத்து விளக்கி உள்ளனர்; உள்ளம் கனிந்து உருகியுள்ளனர்.

மானுடத்தை மீட்க அந்த மகாசக்தி, மானுடத்துக்குள் புகுந்த பேரன்பு நிகழ்வு களின் விளக்கமாக அமைகிறது மரியாவின் பிறப்பும், வாழ்வும், விண்ணேற்பும்.

அன்பினால் யாக்கை ஏற்ற ஐயனைப் போற்றவும் பந்தமெல்லாந்தீர பரஞ்சோதி நீ குருவாய் வந்த வடிவை மறவாது நினைவு கூரவும் அன்னை மரியாவின் அழைப்பும், அவரது ஈடிணையற்ற வாழ்வும், விண்ணேற்பும் நமக்கு வழிமுறையாய் விளங்குகின்றன. அது அவரது இறையரசுப் பிரகடனத்தின் தொடர்ச்சியா கவே ஒலிக்கிறது.

**உள்ளத்தில் செருக்குடன் சிந்திப்போரைச்**
**சிதறடித்து விடுகிறார்**
**வலியோரை அரியணையினின்று தூக்கி**
**எறிந்துள்ளார்**
**தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்**
**பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்**
**செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகிறார்**

புரட்சிகரமாய் ஒலிக்கும் மரியாவின் இந்த இறையரசுப் பிரகடனம் மானுடத்துக்கு வானேறலாய் விளங்கும் வாழ்வியல் பிரகடன மாகும்.

**~ இன்பம் ~**


குறும்(புப்)பா – 136

**ஆடுகின்ற மயிலுக்குத் தோகையழகு**
**பாடுகின்ற குரலுக்குக் குரலுமழகு**
**தேடுகின்ற பொருளுக்கும் நாடுகின்ற வாழ்வுக்கும்**
**பாடுபட் டுழைப்பதே என்றுமழகு.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## நடந்து முடிந்த உலகக் கால்பந்துப் போட்டிக்காக திருத்தந்தை விடுத்த செய்தியிலிருந்து .....

கால்பந்தாட்டம் வெறும் விளையாட்டு மட்டுமல்ல, அது உரையாடல், புரிந்துகொள்ளுதல் ஆகிய உயர்ந்த வழிகளை மனித குடும்பத்திற்குச் சொல்லித்தரும் ஓர் அரிய வாய்ப்பு.

பொதுவாகவே எந்த ஒரு விளையாட்டும் விளையாட்டுத் திடலில் நடைபெறுவது மட்டுமல்ல அதற்கு வெளியிலும் விளையாட்டின் தாக்கங்களை நாம் உணர்கிறோம்.

அனைத்து விளையாட்டுகளும் பயிற்சிகள் மேற்கொள்ளுதல், நேரிய வழிகளில் விளையாடுதல், எதிர்த் தரப்பினரை மதித்தல் என்ற மூன்று பாடங்களைக் கற்றுத்தருகின்றன என்று குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, எக்காரணம் கொண்டும் வெற்றி பெற்றே ஆக வேண்டும் என்று விளையாடுவது தன்னலத்தை மட்டுமே வளர்க்கிறது. மாறாக, உண்மையான வெற்றியடைய எதிர்த் தரப்பினரையும் மதிப்புடன் நடத்த நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

போர் வெற்றியை ஆண்டு தோறும் கொண்டாடி புளகாங்கிதம் அடையும் நமது அரசுகளின் காதுகளில் திருத்தந்தையின் இந்தக் கருத்துகள் ஏறுமா....?



## இரண்டு வயது நிறைந்த மட்டக்களப்பு மறைமாவட்டம்!

மட்டக்களப்பு மறைமாவட்டம் உருவாகி இரண்டாவது ஆண்டு நிறைவுற்றதையடுத்து புளியந்தீவு புனித மரியன்னை பேராலயத்தில் ஆயர் பேரருள்தந்தை யோசப் பொன்னையா ஆண்டகை தலைமையில் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மறைமாவட்ட குருக்கள், துறவிகள் பொதுநிலையினர் உட்பட பெருந்திரளானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருப்பலியைத் தொடர்ந்து சாள்ஸ் மண்டபத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நவீன தமிழ் இலக்கியத்தில் “போர் இலக்கியம்” என்ற தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும்

- தமிழ் நேசன் அடிகளார் -



உலக இலக்கியங்களில் 'போர் இலக்கியம்' என்பது தனியான ஓர் இலக்கிய வகையாகும். 'நவீன தமிழ் இலக்கியத்தில் போர் இலக்கியம்' என்ற தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும். உலகப் போர் இலக்கிய வரிசையில் ஈழத்துப் போர் இலக்கியங்களுக்கும் நிச்சயம் ஓர் இடம் உண்டு என அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தெரிவித்தார்.

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. அன்ரன் ஸ்ரீபன் அடிகளாரின் 'உயிர்ப்பதிவு' என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு 'போர் இலக்கியங்கள்' தொடர்பான சிறப்புரையை ஆற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

போரின் இறுதி நாட்களில் மக்களோடு இருந்து பெற்ற போர்க்கால துன்ப அனுபவங்களை 'உயிர்ப்பதிவு' என்ற பெயரில் அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் நூலாக வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூல் வெளியீட்டு விழா கடந்த 16.06.2014 அன்று மாலை 4.00 மணிக்கு யாழ் பிரதான வீதியில் அமைந்துள்ள யாழ் திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய மன்னார் மறைமாவட்டச் சமூகத் தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவி' இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியரும், மன்னார் தமிழ்ச் சங்கத் தலைவருமான அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் தொடர்ந்து கூறியதாவது,

உலக வரலாற்றில் எங்கெல்லாம் போர்கள் நடைபெற்றனவோ அங்கெல்லாம் உன்னதமான போர் இலக்கியங்கள் தோன்றியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



உலக யுத்தங்களின் விளைவுகள் மட்டுமன்றி அதன்பின்னர் உலகெங்கிலும் நடைபெற்ற பல புரட்சிகளின்போதெல்லாம் சிறந்த போர் இலக்கியங்கள் மலர்ந்துள்ளன. பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்ய இலக்கியங்களில் போர் இலக்கியங்களே பிரசித்திபெற்றவையாக விளங்குகின்றன. இந்தப் போர் இலக்கியங்கள் எவற்றைப் பற்றிப் பேசுகின்றன? உரிமையும் உரிமை மறுப்பும், ஆயுதமும் ஆயுத எதிர்ப்பும், சமாதானமும் சமாதான மீறலும் பற்றி இந்தப் போர் இலக்கியங்கள் பேசுகின்றன. அதுமட்டுமன்றி, காட்டிக்கொடுத்தல், பொருளாதாரத் தடை, பழிவாங்கல், பண்பாட்டு அழிப்பு போன்ற விடயங்கள் பற்றியெல்லாம் இந்தப் போர் இலக்கியங்கள் பேசுகின்றன. ஒரு நாட்டுக்குள் இன, மத, ரீதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளுக்காகக் கிளர்ந்தெழுந்து போராடிய உள்நாட்டுப் போர்களிலிருந்தும் பல உன்னதமான இலக்கியங்கள் தோன்றின. ஐரிஷ், பலஸ்தீன இலக்கியங்கள் இதற்கு நல்ல சான்றாக விளங்குகின்றன.

தமிழில் போர் இலக்கிய மரபின் ஆரம்பமாகச் சங்க காலத்தில் எழுந்த புறத்திணை நூல்களைக் கொள்ளலாம். புறநானூற்றிலிருந்து பதிற்றுப்பத்து வரையிலான புறத்திணை நூல்கள் போரை மட்டுமன்றி அதற்கான மன்னராட்சி அரசியலையும் முன்னிறுத்தின. காவியங்களின் பெரும் பகுதியான காண்டம் கூட 'யுத்த காண்டம்' என்னும் பெயரைக்கொண்டு விளங்கியது. சிற்றிலக்கியங்கள் என இன்று அறியப்படுகின்ற 'பிரபந்த மரபிலும் இந்த நிலையைக் காண முடிகிறது. குறிப்பாகப் 'பரணி' முதலிய சிற்றிலக்கியங்களின் ஆரம்பம் என்பது போர், வெற்றி அரசியல் போன்றவற்றைச் சார்ந்ததாக இருந்தது.

நவீன தமிழிலக்கியத்திலே போர்க்கால இலக்கியங்களின் ஆரம்பம் பாரதியின் வருகையோடு ஆரம்பிக்கின்றது. - இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம் தமிழ் இலக்கியத்திலும் பிரதிபலிக்கின்றது.

நவீன தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றவொரு தனியான பகுப்பை உருவாக்கிய பெருமை ஈழத்தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும். இவ்விலக்கியம் உலகெங்கிலும் தோன்றிய போர் இலக்கியங்களுக்கு இணையானதாக மதிக்கப்படுகின்றது. ஈழத்தமிழ் போர் இலக்கியம் பற்றி ஆங்கில மொழியில் நடைபெற்றுள்ள ஆய்வுகள் இதனை மெய்ப்பிக்கின்றன.

1985ஆம் ஆண்டு வெளிவந்த 'மரணத்துள் வாழ்வோம்' என்ற கவிதைத் தொகுப்பு போரைப் பதிவுசெய்த முதலாவது இலக்கியத் தொகுப்பாகும். இதனைத் தொடர்ந்து போரையும் போரின் வலிகளையும் பிரதிபலிக்கும் பல கவிதைத் தொகுதிகளும் சிறுகதைத் தொகுதிகளும் நாவல்களும் நாடகங்களும் வெளிவந்துள்ளன.

'உயிர்ப்பதிவு' என்ற இந்த நூலையும் ஒரு போர் இலக்கியமாகவே நோக்கவேண்டும். போரின் இறுதிநாட்களின் கண்கண்ட சாட்சியான இந்நூலாசிரியரின் அனுபவப்பதிவுகள் உலகத்தின் மனச்சாட்சியை நிச்சயம் தட்டியெழுப்பும். உண்மைக்குச் சாட்சிபகர வந்த இயேசுவின் பணியாளன் என்ற வகையில் அருட்திரு. ஸ்ரீபன் அடிகளாரும் இந்நூலின் பதிவுகள் ஊடாக உண்மைக்குச் சாட்சியம் பகர்ந்துள்ளார்.

இந்நிகழ்விற்கு யாழ் குருக்கள் மன்றத் தலைவர் அருட்திரு. இ. ஸ்ரலின் அடிகளார் தலைமை தாங்கினார். யாழ் மறைமாவட்டக் குரு முதல்வர் அருட்திரு. யஸ்ரீன் ஞானப்பிரகாசம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். யாழ் மறைமாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவின் தலைவர் அருட்திரு. மங்களராஜா அடிகளார் ஆசியுரை வழங்கினார். இந்நூலுக்கான நயப்புரையை அருட்திரு. இரவிச்சந்திரன் அடிகளார் வழங்கினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தலைமைத்துவப் பண்பும், முகாமைத்துவ ஆளுமையும், தருணத்தில் சமயோசிதமாக நடந்து கொள்ளும் பக்குவமும் வாய்க்கப்பெற்ற ஓர் உயரதிகாரிதான் சுந்தரமூர்த்தி.

ஆடுற மாட்டை ஆடியும், பாடுற மாட்டைப் பாடியும்தான் கறக்க வேண்டுமென்ற யுக்தியைச் சரியாகப் பின்பற்றி வெற்றிக் கனி பறிக்கும் சாணக்கியம் அவருக்குக் கைவந்திருந்தது.

ஒருவருடைய ஆளுமையையும் அவரது பலவீனத்தையும் சரிவரத் தெரிந்திருந்தால் போதும், அவரைக் கைப்பொம்மையாக ஆட்டிப்படைக்கலாம் எனும் தத்துவம் புரிந்தவர் அவர்.

'பிரச்சினை' என்று எதுவும் கிடையாது. பிரச்சினை வருமோ என ஓடி ஒதுங்குவதுதான், எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணம் என்பது அவர் வாதம்.

"நானும் ஒரு காலத்தில் பல மேலதிகாரிகளின் கீழ் வேலை செய்தவன்தான். ஆனால், பிரச்சினை என்று எதையுமே தட்டிக் கழிக்கவில்லை. துணிந்து முகம் கொடுக்கப் பழகினால், 'பூதம்' என நினைத்ததெல்லாம் புஷ்வானமாகிப் போய்விடும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தவன் நான்"

என்று மார்தட்டிக் கொள்வார்.

தனக்குக் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களுடனான வேலை, வேலைப்பழு போன்ற விடயங்களை ஆராய்ந்து கலந்துரையாடும்போது அவர் அடிக்கடி பிரயோகிக்கும் வார்த்தைகள் அவை.

சட்டென்று உணர்ச்சிவசப்பட்டு கோபாவேஷம் கொள்வதும், மறுகணமே சாந்தமாகி தன்னை விடுவித்து நிதானமாகக் கையாள்வதுமான அவரது செயற்றிறன் அனைவருக்கும் பிடித்திருந்தது.

அழைப்பு மணியை அழுத்தி, காரியாலய உதவியாளைக் கூப்பிட்டு, வடிவேலுவை வரச்சொல்லி பணிப்பு விடுத்தார் சுந்தரமூர்த்தி.

குறித்த விடயக் கோவையை எடுத்துக் கொண்டு அவர்முன் போயமர்ந்தான் வடிவேல்.

எதேச்சையாக அவரை நிமிர்ந்து பார்த்த போது வந்த சிரிப்பை வாய்க்குள் அடக்கிக்கொண்டான்.

அறையை விட்டு வெளியே வந்ததும் சில விநாடிகள் தன்னைக் கட்டுப்படுப்படுத்திக்கொண்டவன்,

"ஐயாவின்ர பகிடியைப் பாருங்கோ"

என்று அனைவரதும் கவனத்தைத் தன்பால திருப்பியதும், உதட்டருகே இரு விரல்களை உயர்த்தி 'சிகரட்' ஊதுமாப்போல் பாவனை செய்ததுதான் தாமதம், அலுவலகம் முழுவதும் 'கொல்'லென்று சிரிப்பொலி எழுந்து பரந்தது.

13ம் பக்....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்பு என்பது இன்றைய உலகில் இன்றியமையாததும், பெருவளர்ச்சி பெற்றதுமான ஒரு துறையாக வளர்ந்துள்ளது. அதிக வருமானத்தை ஈட்டும் தொழிலாகவும் வணிகமயப்பட்ட உலகில் உருவாக்கப்பட்டுள்ளது. நவீன உலகில் இதன் முக்கியத்துவம் கருதி ஒவ்வோர் ஆண்டும் ஆண்டவரது விண்ணேற்பு விழாவன்று உலக தகவல் தொடர்பு தினம் அனைத்துலக அளவில் கொண்டாடப்படுகிறது.




தொடர்பாடல் வணிகமயப்பட்டிருப்பினும் அதற்குப் பல்வேறு பரிமாணங்கள் உண்டு. வணிகப் பரிவர்த்தனைக்கு அப்பால், கல்வி, கலை, பண்பாடு, அறிவியல், ஒழுக்கம் என்று முழு மனித உருவாக்கத்துக்கான கருத்துகளை, காட்சிகளை மானுடக் குழுமங்களிடையே கொண்டுசென்று மேம்பாடு காணச்செய்யும் ஆற்றல் தொடர்பாடலுக்கு உண்டு. இந்தவகையில், தொடர்புத் துறை எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்ற வினாவுக்கு அப்பால், மானுட மேம்பாட்டுக்காக உழைக்கும் திருச்சபை தொடர்புத்துறையின் ஆற்றலையும் அதன் வீச்சையும் புரிந்துகொண்டு அதன் உயரிய பயன்களை நமது மக்கள் பெற வேண்டும் என்ற நோக்கோடு அதுபற்றிய சிந்தனைகளை மக்கள் முன்வைப்பதோடு மட்டுப்படுத்தப்பட்ட செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளது.

அதற்கேற்ப இம்மாதம் (ஆகஸ்ட்) 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இலங்கை கத்தோலிக்கத் திருச்சபை உலகத் தொடர்பு தினத்தைக் கொண்டாடுகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்பு விழாவன்று கத்தோலிக்க திருச்சபையால் உலக அளவில் உலகத் தொடர்பு தினம் கொண்டாடப்பட்டாலும், இலங்கையில் நடைமுறை சார்ந்த சில காரணங்களுக்காக ஜூலை மாதத்தில் இத்தினம் அனுசரிக்கப்படுகின்றது.

தொடர்புத் துறை மிகவும் நவீனத்துவம் பெற்றுள்ள இன்றைய உலகில் அதன் பயன்கள் இவ்வளவுதான் என்று சுலபமாக வரையறை செய்துவிட முடியாது.

மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் தொடர்பியல் ஆழமாக ஊடுருவி உள்ளது. நாம் அறிவது, அறிய விரும்புவது, வாழ்வது, வழி நடத்துவது எல்லாமே தொடர்பூடகங்களால் என்றாகிவிட்டது.

இவ்வாறு மனித வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட தொடர்புத் துறையை, தொடர்பூடகக் கலாசாரத்தையிட்டு மானுட வாழ்வில் மானுட மேம்பாட்டில் அக்கறை கொண்டுள்ள திருச்சபை பேசாதிருக்க முடியுமா....?

தொடர்பாடல் என்பது திருச்சபைக்குத் தூரமான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தொன்றல்ல. நவீன தொடர்புசாதனங்களின் வேண்டாத விளைவுகளால் ஒரு காலத்தில் திருச்சபை கொஞ்சம் இறுக்கமாக இருந்தது உண்மைதான். அது தன் மக்கள் வழிதவறி வீழ்ந்து விடக்கூடாதே என்ற அக்கறையால்தான்.

மீட்பின் வரலாறு என்பதே கடவுள் மனிதனோடு தொடர்புகொண்ட கதைதானே! அப்படி இருக்க தொடர்பாடல் என்னும் பிரபஞ்சம் தழுவிய ஒரு தத்துவத்தை திருச்சபை எப்படி வெறுக்க முடியும்? முடியாதல்லவா....? மாறாக, ஒருவர் மற்றவரோடு தொடர்பு கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவும், வளரவும் வளர்த்துவிடவும் கூடிய தொடர்பாடல் கலாசாரத்தை அதன் ஆற்றலையும், பயனையும் தேவையையும், அதன் செல்நெறியையும் சரியாகப் புரிந்து கொண்டு அதனை தன் மக்கள் தகுந்த முறையில் பயன்படுத்தி மேம்பட ஆதரவளிக்கிறது, வழிகாட்டுகிறது திருச்சபை.

அதன் காரணமாகவே, தொடர்புத் துறைக்கென்றே அனைத்துலக அமைப்புகளை நிறுவி அவைகளின் ஆற்றலையும், அவற்றின் பயன்பாட்டையும் தன் மக்கள் அறிந்திடவும் அதன் பயன்களை சரியான முறையில் பெற்றிடவும், திருச்சபையின் முதன்மைப் பணியான நற்செய்தி அறவிப்புப் பணியில் தொடர்பூடக வளங்களைப் பயன்படுத்தி அறுவடைகளைப் பெருக்கவும் திருச்சபை ஆர்வத்தோடும் அக்கறையோடும் ஈடுபடுகிறது.

ஆனால், சுரண்டல் பொருளாதார அமைப்பில் ஆடம்பர நுகர்வுக் கலாசாரப் பெருக்கத்தில் ஏற்றத்தாழ்வுகளும், ஆண்டான் அடிமை, மதப்பிளவு, இனப் பிளவு பெரும்பான்மை சிறுபான்மை,



பணக்காரன், ஏழை என்ற பிரிவுகளும், பேதங்களும் புலமை சார்ந்த இறுமாப்புகளும் 'ஆழவேரோடி வருவதும்' உண்மையே! இவை தொடர்பூடகப் பயன்பாட்டை அதனைக் கையாளும் சக்திகளை மறு கேள்விக்கு உட்படுத்த வேண்டிய அவசியத்தை உருவாக்குகிறது.

கடவுள் மனிதனோடு கொண்ட தொடர்பு மானுட மீட்பை, ஒற்றுமையை, சமாதானத்தை, மகிழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. தாயாகிய திருச்சபை அதனையே தொடர்கிறது. அதனால்தான் தொடர்பூடகப் பெருங்கடலுக்குள் மானுடம் தொலைந்து போய்விடாது இலக்கை நோக்கி, பயணஞ் செய்ய எச்சரிக்கிறது, விழிப்புணர்வூட்டுகிறது.

'எண்ணிப்பார்க்க இயலாத அளவுக்குக் குறுகிய காலத்தில் தகவல்கள் உலகெங்கும் பரிமாறப்படும் இவ்வேளையில், நம்மிடையே உரையாடல்கள் குறைந்து வருவதும் வளர்ந்து வருகிறது' என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எச்சரிக்கையை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மானிட வாழ்வு என்பது நன்மையும், தீமையும் நிறைந்ததுதான், களையும் பயிரும் கலந்ததுதான். அதற்குத் தொடர்பூடகத் துறையும் விதிவிலக்கல்ல. ஆனால், தனது மக்கள் வெறுமனே மனமகிழ்வூட்டும் மாயத் தோற்றங்களில் சிக்கி, பொருளாதார சுரண்டல் சாம்ராஜ்ஜியங்களின் சாமர்த்தியங்களுக்குள் அகப்பட்டு சோரம் போய்விடக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது திருச்சபை.

இவ்வாண்டு கொண்டாடப்படும் 48வது உலகத் தொடர்பு தினத்துக்காக திருத்தந்தை வழங்கியுள்ள செய்தியில், கருவிகளின் உதவியாலும், உலகமயமாக்கல் என்ற போக்கினாலும் இவ்வுலகம் நெருங்கி வருவது போல் தோன்றினாலும் செல்வர், வறியோர் ஆகிய இரு பிரிவினருக்கிடையே இணைக்க முடியாத ஆழமான பிரிவு

13ம் பக்..... ⟶



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கற்களாடும் பந்தயம்!



இன்றைய உலகை பந்தய உலகம் என்று கூறுவார்கள். எல்லாவற்றிலும் பந்தயம்.

ஓட்டப் பந்தயம்

கார் பந்தயம்

குதிரைப் பந்தயம்

கிரிக்கட் பந்தயம் என்று சொல்லிக்கொண்டே போகலாம்.

இந்தப் பந்தயங்களிலே விறுவிறுப்பான பயங்கரமான பந்தயங்களும் உண்டு. கடலலையில் செல்வது, பனிமலையில் சறுக்குவது, மலை உச்சிகளிலிருந்து காலில் கயிற்றைக் கட்டி தலைகீழாகக் குதிப்பது என்று படுபயங்கரப் பந்தயங்களும் நடைபெறுகின்றன.

இவையெல்லாம் மனிதர்கள் சாதனை படைக்க வேண்டும் என்ற ஒரு வெறியோடு நடத்தும் பந்தயங்கள். ஆனால், உயிரே இல்லாத கற்கள் நடத்தும் பந்தயங்களும் உள்ளனவாம்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் 'மரணப் பள்ளத்தாக்கு' எனப்படும் ஒரு பயங்கரப் பள்ளத்தாக்கு உண்டு.

இங்கே ஆண்டுக்கு 860 அடி வேகத்தில் தானாகவே நகர்ந்து போகும் கற்கள்கூட இருக்கின்றன. இங்கே உல்லாசப் பயணிகள் கூட்டம் அலை மோதுகிறதாம்.

இந்தக் கற்கள் எப்படி தானாகவே நகருகின்றன...? என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிக்க இங்கே வராத விஞ்ஞானிகளே இல்லையாம். ஆனால், இன்றுவரை காரணத்தை கண்டுபிடிக்க யாராலும் முடியவில்லை.

- இன்பம் -

---




கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க தொலைக்காட்சிக் கலையகம் திறக்கப்பட்டுள்ளது. கடந்த ஜூன் மாதம் 7ம் திகதி பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை இதனைத் திறந்து வைத்தார்.

"வேர்பும்" என்ற பெயரைக் கொண்ட இந்தத் தொலைக்காட்சி அலைவரிசை இணையத் தளத்தில் ஒளிபரப்பாகும். இவ்வாண்டு டிசம்பர் 4ம் திகதி இதன் முதல் ஒளிபரப்பு ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பாடசாலை விளையாட்டுப் போட்டிகளும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளும்



இலங்கையின் அரச பாடசாலைகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளித்து, விளையாட்டுகளுக்கு மீளவும் உற்சாகமளித்து, விளையாட்டில் பங்கு பற்றியோருக்குப் பரிசுகளும் விருதுகளும் வழங்கும் செயற்கிரமம் ஆகியவற்றால் தேசிய மட்டத்தில் விளையாட்டு முக்கியம் பெற்றுள்ளது.

விளையாட்டுத் துறைக்கென அரசு ஓர் அமைச்சை நிறுவி, பொருள்சார் அமைச்சு ஒன்றைக் கட்டியெழுப்பி அதற்கு அதிகூடிய முக்கியத்துவம் அளிக்க முன்வந்துள்ளது.

விளையாட்டின் முதன்மையும் முக்கியத்துவமும் அதன் தலைமைத்துவம் பற்றிச் சரியாக விளங்கிகொள்ளாத பெற்றோர், பிள்ளைகளை டியுசன் வகுப்புகளுக்கனுப்பி, பிள்ளையை பரீட்சையில் சித்திபெற வைப்பதையே நோக்காகக் கொண்டுள்ளனர். பரீட்சையில் கூடிய புள்ளி பெறுவதுதான் வாழ்க்கையாகக் கருதுகின்றனர். வாழ்க்கையின் குறிக்கோள் பரீட்சை மட்டுமன்று. கல்வி கற்ற பெற்றோரும் பரீட்சைப் புள்ளிகளின் போலி அந்தஸ்துக்காக தம் பிள்ளையின் வாழ்வை ஒருதலைப்பட்சமாக மாற்றி விடுகின்றனர்.

விளையாட்டு உடல் வளர்ச்சிக்கும் உள வளர்ச்சிக்கும் உறுதுணையாக நிற்கின்றது.

காலத்துக்குக் காலம் விளையாட்டுகளையும் தேகப் பயிற்சிகளையும் அரசாங்கம் ஊக்குவிக்க எண்ணும்வேளை அது மக்களின் மனப்பாங்கினால் பின்னடைவைத் தருகின்றது.

மேலை நாடுகள் விளையாட்டுத் துறைக்குச் சம அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்து ஊக்கமளித்து உன்னத விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளன. இலங்கையில் கல்வி போதிக்க வந்த மேலை நாட்டு மிஷனரிமாரும் கிறிக்கட், கூடைப் பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுகளுக்கு முதன்மை அளித்தனர். இதனால் இன்றும் வருடந்தோறும் பாடசாலைகளான St.பீற்றஸ், St தோமஸ், றோயல் கல்லூரி, St.யோன் கல்லூரி, பற்றிக்ஸ் கல்லூரி போன்ற பாடசாலைகள், ஆரோக்கியமான Cricket விளையாட்டையும் வருடந்தோறும் போட்டிகளை நடத்தி வருவதுடன் விளையாட்டுப் பாரம்பரியங்களையும் கட்டியெழுப்பியுள்ளன.

**அருட்திரு கலாநிதி S.A.I. மத்தியு S.L.E.A.S - I**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இலங்கையில் பல மட்டங்களில் பாடசாலைகள் இயங்குகின்றன. வருடந்தோறும் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் மாகாண, தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெறுகின்றன. ஆனால், ஒரு சில விளையாட்டு வீரர்களே சர்வதேச ரீதியில் இடம் பெறுகின்றனர். பௌதீக வளங்களைப் பெருக்கிக் கொண்ட சில பாடசாலைகளும் விளையாட்டை வளப்படுத்துவதில்லை. இதனாலேயே அரசு விளையாட்டை மேம்படுத்த உற்சாகத்தை அளிக்க முன்வந்துள்ளது. ஓர் ஆரோக்கிய மான உடம்பிலேயே ஆரோக்கியமான கல்வி எழுமுடியும்; ஓர் உயர்ந்த தரத்திலான பிள்ளையை உருவாக்க முடியும்.


**விளையாட்டுத் துறைக்குப் பிள்ளையைத் தேர்ந்தெடுப்பது எப்படி?**

தொகையான மாணவர்களைக் கொண்டுள்ள பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறுகின்றன. இருப்பினும் தொடர்ந்தேர்ச்சியான பயிற்சி என்பன அமைவதில்லை. விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னர் ஓரிரு வாரங்களில் மாணவர் தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சியின்றிக் களமிறங்குகின்றனர். அணி நடை நிகழ்ச்சி ஒன்றில் இருந்தே அப்பாடசாலையின் விளையாட்டுத் தரத்தை நிர்ணயிக்க முடியும். பல ஒத்திகைகள் அவசியம்.

மாணவர் தெரிவில், மாணவர்கள் ஒத்த பருமன், உயரம் என்பன முக்கியத்துவம் பெறுவதில்லை. விளையாட்டுத் துறையில் முக்கியத்துவம் பெற்ற பெரியோர்களின் உதவி ஒத்தாசைகள் பெறப்படுவதில்லை. (அதேபோன்று பாடசாலையின் உயர்வகுப்பு மாணவர்களினதோ ஆசிரியர்களினதோ பங்களிப்புப் பயன்படுத்தப்படுவதில்லை)

கல்வி அதிகாரிகளும் விளையாட்டுப் போட்டிகளுக்கு அதிதிகளாக அழைக்கப்பட்டாலும் அவர்களும் "விளையாட்டுப் போட்டிகள் நன்றாயிருந்தன" எனும் மெழுகுப் பூச்சில் உரைகளை முடிக்கின்றனர். குறைகளை வெளியில் கூறினால் பாடசாலை ஏற்று கொள்ளாது எனும் மனப்பாங்கை விருத்தி செய்கின்றனரோ! அண்மையில் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் சூசகமாக விளையாட்டுப் போட்டியின் முடிவில்,

"பாடசாலைகள் அணிநடைப் பயிற்சிகளின்போது அதனை ஒலி ஒளிப் படமாக்கி அணி நடை பயிலும் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தி, அவர்களே தம் பிழைகளை உணரச் செய்தல் வேண்டும்" என்று தம் உரையில் குறிப்பிட்டமை வரவேற்கக் கூடியதும் பாராட்டக் கூடியதுமாகும்.



**ஒரியூர் புனித அருளானந்தரின் வரலாறு படமாக்கப்படுகிறது...!**

தமிழ்நாடு – ஓரியூர் புனித அருளானந்தரின் வாழ்க்கை வரலாறு 'மண் சிவந்தது' என்னும் பெயரில் திரைப்படமாக வெளிவரவிருக்கிறது.

அருள்தந்தை ஜோண் பிரிட்டோ என்னும் பெயரைக் கொண்ட புனித அருளானந்தர் நற்செய்திப் பணியாளராக இந்திய நாட்டுக்கு வந்து ஓரியூரில் தலை வெட்டப்பட்டு வேதசாட்சியாக மரித்தவர்.

இப்புனிதரின் பெயரால் ஓரியூரில் அமைந்திருக்கும் பேராலயத்தை இலட்சக்கணக்கான மக்கள் தரிசித்தவண்ணமுள்ளனர்.

புனித அருளானந்தரின் வாழ்க்கை வரலாற்றைக் கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நாடகமாக அரங்கேற்றி வந்த திருவாளர் எம்.ஏ. சுந்தரம் அவர்கள் இப்போது அதனைத் திரைப்படமாக்க முன்வந்துள்ளார்.

கடந்த மே மாதம் 7ம் திகதி சென்னை புனித தோமையார் பேராலய வளாகத்தில் பேரருள்தந்தை ரெமிஜியுஸ் தலைமையில் 'மண்சிவந்தது' திரைப் படத் துவக்க விழா நடைபெற்றது.


இப்படியான விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு விற்பனர்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படுவதில்லை. இல்லங்களின் அணித் தலைவர்கள் அவர்களுக்குரிய தகைமைகளின் பொருட்டு தெரிவு செய்யப்படின் விளையாட்டு வீரர்களால் விளையாட்டின் தரம் ஓங்கும்.

13ம் பக் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மனித வாழ்வில் ஒவ்வொருவரும்
விதம் விதமான வாழ்வைப் பெறுகின்றனர்.
சமயங்களில் இது குறித்து ஒருவர்க்கொருவர்
பொறாமைகொள்வதுமுண்டு;
படைத்தவனை வை(த்)து(க்) கொள்வதுமுண்டு!
நடுநிலையாக எண்ணிப் பார்க்கையில்
ஒவ்வொருவரது வாழ்வும்
அவரவர் தெரிவின் அடிப்படையில்தான்
அமைவது தெளிவாகும்!!
நன்கு முனைந்து படித்தவன் அறிஞனாகின்றான்
உணர்ந்து படித்தவன் விற்பன்னன் ஆகின்றான்
வாழ்வைப் படித்தவன் ஞானியாகின்றான்
ஆறுதலில் சுகத்தைக் கண்டவன் கோட்டை விடுகின்றான்;
கேட்டை அடைகின்றான்!
அனைத்துமே முடிந்தது கண்டு அவனே
தவறு செய்தேன் எனப் புலம்புகின்றான்.
ஏராளமாகப் படைத்தவன்
தெரிவை நம் கையில் வைத்துவிட்டான்;
வாழ்வோ சாவோ, அது இன்றோ நாளையோ
எல்லாம் நம் கையிலேதான்!



## எண்ணிப்பார்க்கையில் ...!

**பழக்கதோஷம் .....**

தமது அறையின் வாசல் வரை வந்த சுந்தரமூர்த்தி,

"ஏன்டாப்பா, எனக்கும் சொல்லிச் சிரியுங்கோவன்"

என்றாரே பார்க்கலாம்.

எப்படிச் சொல்வது...?

அனைவரும் மௌனம் காத்தனர்.

ஒரு சராசரி மனிதன்போல், தனது பலவீனத்தை அறியாத அப்பிராணியாகவும் சமயத்தில் நடந்துகொள்வதை அவரால் சீர்செய்ய முடியவில்லை.

**பாடசாலை விளையாட்டுப் போட்டிகள் ...........**

விளையாட்டுகள் அவ்வவ் விளையாட்டிற்கேற்ப வருடந்தோறும் கொடுக்கப்படும் பயிற்சியாகும். ஓரிரு தினங்களில் மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளுக்குத் தெரிவு செய்யமுடியாது. ஒரு வாரத்துக்கிடையில் மாணவர்களின் விளையாட்டுப் பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென பொறுப்பதிகாரிகள் கூறுவது நியாயமில்லை.

**தொடரும் ....**

உருவாகியுள்ளது என்பதையும் நாம் மறுக்க முடியாது என்று கூறியுள்ளார்.

இன்றைய நவீன வாழ்க்கை முறை தூரங்களைக் குறைத்து நேரங்களைச் சுருக்கி, தொடர்புகளைப் பெருக்கிவிட்டது உண்மைதான். இன்றைய வாழ்க்கை முறையும், கல்வியும், தொழிலும் தொடர்பூடகக் கலாசாரமும் ஒரு குடும்பத்தை - குடும்ப உறுப்பினர்களை தங்கள் வீட்டுக்குள்ளேயே அந்நியப்படுத்திவிடுகின்றன.

இதனால், உலக வாழ்க்கையிலிருந்து நாம் உயரப் பறந்துவிட முடியாது. திருத்தந்தை கூறுவதுபோல், கிறிஸ்தவர்களாகிய நாம் அச்சமின்றி டிஜிற்றல் உலகின் குடிமக்களாக மாறத்தான் வேண்டும். அதேவேளை, தொடர்புலகம் நமக்கு முன்வைத்துள்ள சவால்களை - இவற்றுக்குப் பின்னால் உள்ள ஏகாதிபத்திய சுரண்டல் சக்திகளை இனங்கண்டு விழிப்போடு வாழ்வதும் நமக்கு இறைவன் தந்துள்ள பெருங்கொடைகளை, ஆக்கத்திறன்களை, அளப்பெரும் வளங்களை அடுத்தவரோடும் அனைவரோடும் பகிர்ந்து வாழ்வதுமே மானிட வாழ்வை மேம்படுத்தும், நிறைவுபடுத்தும்.

~ மலர்வேந்தன் ~



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media





**— ஆழியோன் —**

இம்முறை 'தொண்டனின் சில நிமிடங்கட்காக' நாம் சந்திப்பது, பிரபல அண்ணாவியார் வீரசிங்கம் இராசமாணிக்கம் அவர்களை. எருவில் – வடக்கு, வார்ட் றோட் என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. 1947ம் ஆண்டு மார்ச் மாதம் இரண்டாம் திகதி பிறந்த இராசமாணிக்கம் அண்ணாவியார் அவர்கள் வயல் அறுவடை வேலைக்குச் செல்ல ஆயத்தமான வேளையிலும் எமக்காக நேரம் ஒதுக்கித் தந்தார்.

எளிமையான சுபாவம்; கண்ணியமான தோற்றம்; மென்மையான அளந்தளந்து பேசும் தன்மை என்பன அவரின் பால் எம்மை ஈர்க்க வைத்தன.

▲ **வணக்கம் ஐயா! கூத்துக் கலையில் உங்களுக்கு ஈடுபாடு ஏற்பட்டது எவ்வாறு என்று கூறமுடியுமா?**

○ வடமோடி கூத்தில்தான் எனக்கு ஈடுபாடு அதிகம் உண்டு. நான், எருவில் அ.த.கலவன் பாடசாலையில் (தற்போது கண்ணகி வித்தியாலயம்) எனது ஆரம்பக் கல்வியைக் கற்றேன். தமிழ்த்தின விழாவின்போது கூத்துகளுக்கு மத்தளம் வாசிக்க முற்படுவதுண்டு. வீட்டில் வைத்து பேணியில் அடித்துப் பழகி வந்துள்ளேன். மத்தளத்தை தூக்கி வைத்துக்கொள்ள இயலாத வயது அப்போது. இவ்வாறாகத்தான் கூத்துக் கலையில் ஈடுபடத் தொடங்கினேன்.



'பப்பரவாகன்' என்னும் கூத்தை வேறொருவர் மத்தளத்தை தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்க நான் நின்று அடித்தேன். அனைவரினதும் பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டேன்.

வில்லுப் பாட்டுகள், வசந்தன், கரகம், கும்மி என்று எல்லாவற்றிற்கும் மத்தளம் அடித்துள்ளேன்.

▲ **அண்ணாவியார் என்று எவரைக் குறிப்பிடுவது வழக்கம்?**

○ பெரிய கூத்துகளில் மேளம் அடிப்பவரை அண்ணாவி யார் என்று அழைப்பார்கள். எனக்கு சில பெரிய கூத்துகளில் குறைபாடு உண்டு என்ற உணர்வு இருந்தது. உதாரணமாகச் சொல்லப்போனால், கர்ணனின் உடலில் அம்பு பாய்ந்து விழுந்து கிடக்கின்றான். அவ்வாறான வேளையில் அவன் எவ்வாறு எழும்பி ஆடுவான்? எனக்கு அதில் உடன்பாடு இல்லை. நானே பாடல் எழுதி, கர்ணன் போர் என்ற பெயரில் கூத்தை அரங்கேற்றினேன். கர்ணன் விழுந்து கிடக்கும்போது 'அகவல்' மெட்டில் வாசித்தேன். தாளம் புதுமையாக இருந்தது எனப் பாராட்டப்பட்டேன்.

▲ **இதுவரை எத்தனை கூத்துகள் மட்டில் செய்துள்ளீர்கள்?**

○ சுமார் நூற்றிஐம்பது கூத்துகளை மேடையேற்றியுள்ளேன். இவற்றில் சுமார் எழுபது கூத்துகள் எனது சொந்தப் படைப்புகள்.

▲ **கூத்துகளிற்கான பாடல்களை எழுதும்போது, அதற்கென்று 'மூட்' தேவைப்படுமா?**

○ ஆமாம்! கண்டிப்பாக....!! அப்படியான நிலையில் என்னை மறந்துவிடுவேன்; பாடல் வரிகளை மட்டும் எழுதிக் கொண்டே போவேன். இப்படித்தான் ஒரு முறை 'விராலன் வதை' என்ற முக்கால் மணிநேரக் கூத்தை ஒருநாளில் எழுதி முடித்தேன்.

வீட்டு முற்றத்தில் மணல் குவிக்கப்பட்டு இருந்தது. மரநிழலில் மணலின்மேல் அமர்ந்துகொண்டு 'விராலன் வதையை' எழுதிக்கொண்டிருந்தேன். மேலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**"கலைகளை இரசியுங்கள்;
கூத்துக் கலை வளர ஒத்துழையுங்கள்;
கலைஞர்களை மதித்து ஆதரியுங்கள்"**

சருகுகள் விழுந்துகொண்டிருந்தன. அவற்றை ஒரு கையால் தட்டிவிட்டவாறே மறு கையால் எழுதிக்கொண்டிருந்தேன். அவ்வாறு கையால் பிடித்துத் தட்டிவிட்டதில் ஒன்று 'கண்டன் கரிவளளை' என்னும் பாம்பு என்று பின்னர்தான் தெரியவந்தது. எனக்கு பாம்பு வைத்தியம் கொஞ்சம் தெரியும் என்றாலும் வீட்டார் என்னை களுவாஞ்சிக்குடி ஆஸ்பத்திரியில் சேர்த்து விட்டார்கள். இரவிரவாய் ஒரே சனம். பேசாமல் 'ரிக்கட்' வெட்டாமல் ஓடிவந்து விட்டேன்.

▲ **உங்கள் கூத்துகளில் பிடித்தமான வேறு கூத்துகள் உண்டா?**

◯ பல உண்டு. குறிப்பாக 'சிசுபாலன் வருகை' பிரபல்யமான ஒரு படைப்பு.

▲ **கூத்துகளினால் நீங்கள் சம்பாதித்ததுண்டா...?**

◯ இல்லவேயில்லை, எல்லாம் ஓர் ஆத்ம திருப்திக்காகத் தான். தற்போது பாடசாலைகளில் கூத்துகளைப் பழக்குவது மட்டுந்தான். வெஸ்லி கொலிஜ், பற்றிமாக் கொலிஜ் போன்றவற்றில் சன்மானம் தருவார்கள்.

▲ **உங்களுடைய தற்போதைய ஆசை என்ன...?**

◯ என்னுடைய சில கூத்துகளையாவது நூல் வடிவில் வெளியிட வேண்டும். (பொறுப்புள்ள எவராவது இதனைச் செய்துகொடுக்கலாமல்லவா.....?)

▲ **நீங்கள் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளதாக அறிகிறோம், அவை பற்றிச் சொல்ல முடியுமா...?**

◯ மத்திய அரசால் வழங்கப்பட்ட 'கலாபூசணம்' என்ற விருதைப் பெற்றுள்ளேன் மற்றும் 'முதலமைச்சர் விருது', கலாசாரத் திணைக்களத்தின் ஐம்பதாம் ஆண்டு விழாவை முன்னிட்டு சிறப்பு விருதும், பொற்கிழியும் தந்தார்கள். இதனைத் தவிர பல்வேறு மேடைகளில் கௌரவங்கள் கிடைத்துள்ளன.

▲ **கூத்துக்கலை தொடர்பாக நீங்கள் பெற்றுள்ள அறிவு, அனுபவங்கள் தொடர்பாக ஏனையவர்கள் பயன்பெறக்கூடிய வாய்ப்புகள் உள்ளனவா...?**

◯ பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள், ஏனைய கலை நிறுவன பிள்ளைகள், கூத்துக்கலை தொடர்பான ஆர்வம் உடையவர்கள் பலர் என்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு செல்கின்றார்கள்.

▲ **கூத்துகள் தொடர்பாக யாரும் பிழைகள் விட்டால் விட்டுக்கொடுக்கமாட்டீர்களாமே! மெய்தானா...?**

◯ ஆம்! மெய்தான்!! பேராசிரியர் வித்தியானந்தன் நினைவு கூத்துப் போட்டியொன்று முன்பு கொழும்பில் இடம் பெற்றது. அதற்கும் கூத்தைக் கொண்டுசென்றிருந்தேன். அங்குக்கூட சில பேராசிரியர்களுடன் முரண்பட வேண்டியிருந்தது.

▲ **வாசகர்கட்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்...?**

◯ கலைகளை இரசியுங்கள்; கூத்துக் கலை வளர ஒத்துழையுங்கள்; கலைஞர்களை மதித்து ஆதரியுங்கள்!

**பேரப்பிள்ளைகளைக் கண்டுவிட்டவரும், மூன்று பிள்ளைகளின் தந்தையுமான திருவாளர் வீரசிங்கம் இராசமாணிக்கம் அண்ணாவியார் அவர்கட்கு தொண்டனின் சார்பில் நன்றிகூறி வாழ்த்தி விடை பெற்றுக் கொண்டோம்.**

### உங்களுக்குத் தெரியுமா

உலகில் பத்து மில்லியன் உயிரின வகைகள் வாழ்கின்றன. இந்த எண்ணிக்கை ஒவ்வொருநாளும் அதிகரித்து வருகிறது. அதேவேளை பூமியில் ஒவ்வொரு மனிதனின் உடலிலும் 200 மில்லியன் என்ற வீதத்தில் பூச்சிகள் உள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வீட்டு வைத்தியம்

– ஆனந்தச் சித்தன் –

# சித்தர்கள் போற்றிடும் எலுமிச்சை

தேசிக்காய் என்று சொல்லப்படும் எலுமிச்சை எல்லோருக்கும் தெரிந்த ஒரு பழம். பெரும்பாலும் கறி சமைக்க புளிச் சுவைக்காகப் பாவிப்பவர்களே அதிகம். சிலர் தாகத்தின்போது எலுமிச்சை சாறு பிழிந்து நீரும், சீனியும் சேர்த்துப் பானமாக அருந்துவதும் உண்டு.

தமிழர்களுடைய குறிப்பாக இந்து சமய சகோதரருடைய இறைவழிபாட்டிலும், விருந்தோம்பல்களிலும் எலுமிச்சை முக்கிய இடம்பெறுகிறது.

மருத்துவ குணம் மிகுந்த எலுமிச்சம் பழத்தை நமது முன்னோர் பல்வேறு நோய்களுக்கும் சிறந்த மருந்தாகப் பாவித்துப் பயனடைந்தனர். மேல்நாட்டு மருத்துவத்தின் வணிகப் பெருக்கத்தால் எளிமையானதும் பயன்மிக்கதுமான வீட்டு மருத்துவம் எல்லாம் மறக்கப்பட்டுவிட்டது. இளைய தலைமுறை பெனடோல், பிரிட்டன், ஆஸ்பிரின், அமெக்சொசிலின் என்றே அலைகிறது.

'மந்திரிக்கு மந்திரியாக, மன்னனுக்கு மன்னனாக, தந்திரிக்கு மித்திரனாக' என சித்தர் தேரர் பாடியிருக்கும் பழம் எலுமிச்சை.

மந்திரி எனும் பித்தம் அதிகரித்து வரும் நோய்க்கு அரசவையில் மந்திரிபோல் பிரச்சினை இல்லாமல், பக்க விளைவு இல்லாமல் தணிக்கும் ஆற்றலும், உடலின் மன்னனாக இருக்கும் வாதத்தை சரியாக நிர்வகிக்கும் ஆற்றலும், தந்திரமாக உடலில் சேரும் கபத்தை நண்பனாக இருந்தும் வெளியேற்றும் இயல்பும் கொண்டது எலுமிச்சை என்பது சித்தர் தேரரின் கவித்துவமான கூற்றாகும்.

எலுமிச்சையில் விற்றமின் சி சத்து அதிகமாக உண்டு. அதுமட்டுமன்று வாந்தி, தலை சுற்றல், இரத்தக் கொதிப்பு காரணமாக வரும் தலைவலி, மயக்கம் போன்ற பல நோய்களுக்கு அது மருந்தாகும்.

எலுமிச்சையின் தோலில், பழத்தில் உள்ள ERIOCITRIN, HASPERIPIN, NARINGIN முதலான பொருட்கள் உடல் எடையைக் குறைக்க, சர்க்கரை நோய் வராது தடுக்க, இரத்தக் கொழுப்பைக் குறைக்க என பலதுக்கும் பயன்படுவதை அறிவியல் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன் இது புற்றுநோய்க்குச் செய்யப்படும் 'கீமோதெரபியைக்' காட்டிலும் பாதுகாப்பான புற்றுநோய் மருத்துவமாகவும் உள்ளது. எலுமிச்சைச் சாறு புற்றுநோய் செல்களின் வளர்ச்சியைத் தடுப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. எலுமிச்சைகளில் தேன் கலந்தோ, எலுமிச்சைச் சாறு கலந்த பச்சைத் தேனீரில் (Green Tea) தேன் சேர்த்தோ ஏற்கெனவே செய்யும் மருத்துவத்துக்கு மேலதிகமாக இதனையும் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு இயேசுசபை கல்வி நிலையத்தில்
# ஆங்கில டிப்ளோமா பாடநெறி

சென்னை லொயோலா கல்லூரி, மட்டக்களப்பு இயேசு சபை கல்வி நிலையத்துடன் இணைந்து நடத்தும் ஆங்கில டிப்ளோமா பாடநெறிக்கான வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இது ஓராண்டுக்கான கால அளவைக் கொண்டதாகும். சான்றிதழ்கள் லொயோலா கல்லூரியினால் வழங்கப்படும்.

➡ **கிழமை நாட்களில் :**
**(திங்கள் முதல் வெள்ளி)**
**மாலை 3.00 முதல் 4.30 வரை**
**விரிவுரைகள் ஆரம்பம் :**
**01 செப்டெம்பர் 2014**

➡ **வார இறுதி நாட்களில் :**
**(சனி மற்றும் ஞாயிறு)**
**காலை 9.00 முதல் பி.ப 1.00 வரை**
**விரிவுரைகள் ஆரம்பம் :**
**06 செப்டெம்பர் 2014**



**இல.01,**
**இயேசுசபை வீதி,**
**மட்டக்களப்பு.**

Email : jesuitacbatti@gmail.com Phone : 065-2225422 / 077 9996284


எலுமிச்சை ஓர் அழகு சாதனமும் கூட. சருமத்தின் நிற மாற்றங்களைச் சீர் செய்யும். சருமத்தில் ஏற்படும் கொப்புளம், அரிப்பு போன்றவற்றைச் சரிசெய்யும்.

எலுமிச்சைச் சாறு தலையில் உள்ள பொடுகு மற்றும் தலைமுடியில் உள்ள பிசுபிசுப்பை அகற்றும். எலுமிச்சைத் தோலால் தேய்த்தால் பற்களில் உள்ள கறைகள் மறையும்.

விற்றமின் சி குறைபாடால் பல் ஈறுகள் வலுவிழக்கும். இரத்தக் கசிவு ஏற்படும். மூட்டுகளில் வீக்கம், உபாதை உண்டாகும். சொறி சிரங்கு வரும். இவற்றுக்கெல்லாம் எலுமிச்சை கைகண்ட மருந்தாகும்.

வயிறு சம்பந்தமான நோய்களைக் குணமாக்கும் ஆற்றல் இதற்கு உண்டு. மலச் சிக்கலையும் நீக்கும். வாய், வயிறு போன்ற இடங்களில் ஏற்படும் புண்ணை ஆற்றும். வாய் நாற்றத்தையும் போக்கும்.




கண் நோய்களைக் குணமாக்கும் சக்தியும் இதற்கு உள்ளது. தூக்கமின்மையைப் போக்கி ஆழ்ந்த நித்திரையைக் கொடுக்கும்.

கோடை காலத்தில் வெப்பத்தினால் சிறுநீர்த் தாரையில் எரிச்சலும் சொட்டுச் சொட்டாக நீர் பிரிதலும் இருந்தால் அதனை நீக்கும் ஆற்றல் எலுமிச்சைக்கு உண்டு. அத்துடன் இது விஷத்தையும் முறிக்கும். தேள் போன்ற விஷப் பூச்சிகள் கொட்டிவிட்டால் கொட்டிய இடத்தின் மேல் எலுமிச்சம் பழத்தைக் கொண்டு நன்றாக அழுத்தித் தேய்க்க விஷம் இறங்கும் என்று சொல்லப்படுகிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




சென்ற இதழ் தொடர் .....

**முப்பது மனித உரிமைகளும் எவை?**

12. **தனிமைக்கான உரிமை:** எமது நற்பெயரை களங்கப்படுத்த யாரும் முயற்சிக்கக் கூடாது. யாருக்கும் தக்க காரணங்களின்றி, எம் வீட்டினுள் நுழைந்து, எமது கடிதங்களைத் திறந்து பார்க்கவோ, எம்மையோ அல்லது எம் குடும்பத்தவரையோ தொல்லைப்படுத்தவோ உரிமை கிடையாது.

13. **நகரும் உரிமை:** எமது சொந்த நாட்டினுள் நாம் செல்ல விரும்பும் இடங்களுக்குச் சென்று வரவும், நாம் விரும்பியவாறு பயணம் செய்யவும் எமக்கு உரிமை உண்டு.

14. **வாழ்வதற்கு ஒரு பாதுகாப்பான இடத்தைக் கொண்டிருக்கும் உரிமை:** எமது சொந்த நாட்டில் நாம் அச்சுறுத்தப்பட்டால் மோசமாக நடத்தப்பட்டால், அங்கிருந்து தப்பியோடி பாதுகாப்பிற்கென வேறொரு நாட்டிற்குச் செல்ல முடியும்.

15. **தேசியத்துக்கான உரிமை:** ஒரு நாட்டுக்குச் சொந்தமானவர்களாக அமையும் உரிமை எமக்குண்டு.

16. **திருமணமும் குடும்பமும்:** எந்தவொரு வளர்ந்து பெரியவரான நபருக்கும், அவர் விரும்பும் பட்சத்தில் திருமணம் செய்யவும், குடும்பம் ஒன்றை உருவாக்கிக் கொள்ளவும் உரிமையுண்டு. திருமணமான ஆணும் பெண்ணும் அவர்கள் பிரிந்து வாழ்ந்தாலும் கூட சம உரிமை கொண்டவர்களே.

17. **உங்களுக்குச் சொந்தமானவை மீது உங்களுக்குள்ள உரிமை:** ஒவ்வொருவருக்கும் பொருட்களைச் சொந்தமாகக் கொண்டிருக்கவும், அவற்றைப் பகிர்ந்து கொள்வதற்கும் உரிமை உண்டு. தக்க காரணங்களின்றி எவரும் எம்மிடம் உள்ளவற்றை எடுத்துக் கொள்ள முடியாது.

18. **சிந்தனைச் சுதந்திரம்:** நாம் நம்ப விரும்பும் எதையும் நம்பவும், ஒரு சமயத்தைக் கொண்டிருக்கவும் அல்லது விரும்பினால் அதை மாற்றிக்கொள்ளவும் எமக்கு உரிமையுண்டு.

19. **வெளிப்படுத்தும் சுதந்திரம்:** எம் ஒவ்வொருவருக்கும் எமக்கான சிந்தனையை உருவாக்கிக் கொள்ளவும், நாம் விரும்புபவற்றைச் சிந்திக்கவும், நாம் சிந்திப்பவற்றை எடுத்துச் சொல்லவும், மற்றவர்களுடன் எமது யோசனைகளைப் பகிர்ந்து கொள்ளவும் உரிமை கொண்டவர்களாக உள்ளோம்.

20. **பொது இடங்களில் கூடும் உரிமை:** எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் படிக்கு அமைதியான வழியில் எமது நண்பர்களைச் சந்திக்கவும் ஒன்றுபட்டு உழைக்கவும் எமக்கு உரிமை உண்டு. யாரும் நாம் விரும்பாத குழு ஒன்றுடன் இணையும்படி எம்மை வற்புறுத்த முடியாது.

21. **ஜனநாயகத்திற்கான உரிமை:** எமது நாட்டின் அரசாங்கத்தில் பங்கேற்கும் உரிமை எமக்கு இருக்கிறது. ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வளர்ந்தவரும் தமக்கான தலைவர்களைத் தெரிந்தெடுக்க அனுமதிக்கப்பட வேண்டும்.

22. **சமூகப் பாதுகாப்பு:** எம்மால் கொண்டிருக்கக் கூடிய வீடு, மருத்துவம், கல்வி. குழந்தைப் பராமரிப்பு, வாழ்க்கைக்குத் போதுமான பணம், நோயுற்றாலோ அல்லது வயதாகிவிட்டாலோ மருத்துவ உதவி ஆகிய வற்றிற்கு உரிமை கொண்டவர்கள் நாங்கள்.

23. **ஊழியர் உரிமைகள்:** ஒவ்வொரு வளர்ந்த நபரும் ஒரு தொழில் வாய்ப்புக்கு உரிமை கொண்டவரே. தமது உழைப்புக்கேற்ற நியாயமான ஊதியம் பெறவும், ஒரு தொழிற் சங்கத்தில் இணைந்து கொள்ளும் உரிமை களெல்லாம் அவருக்கு உண்டு.

24. **விளையாடுவதற்கான உரிமை:** எமது வேலைகளிலிருந்து ஓய்வெடுத்துக் கொள்ள வும், தளர்வாய் - ஆறுதலாய் இருக்கவும் நம் ஒவ்வொருவரும் உரிமை கொண்டுள் ளோம்.

25. **அனைவருக்கும் உணவு மற்றும் உறையுள்:** நல்லதொரு வாழ்க்கையை வாழும் உரிமை எமக்குண்டு. தாய்மார், பிள்ளைகள், வயது முதிர்ந்தோர், வேலையில்லாதோர், ஊனமுற்றோர் மற்றும் அனைத்து மக்கள் மீதும் கரிசனை காட்டப்படவேண்டும்.

26. **கல்விக்கான உரிமை:** கல்வி ஓர் உரிமை: ஆரம்பப் பாடசாலைக் கல்வி இலவசமாக அமைய வேண்டும். ஐக்கிய நாடுகள் பற்றி அறிந்து கொள்வதுடன் மற்றவர்களோடு இயைந்து போவது குறித்தும் அறிந்திருக்க வேண்டும். நாங்கள் எதைக் கற்க வேண்டும் என்பது குறித்து எங்கள் பெற்றோர் தெரிவு செய்ய முடியும்.

27. **பதிப்புரிமை:** புதிப்புரிமை என்பது ஒருவரது கலையாக்கங்களையோ, எழுத்துருவாக்கங்களையோ மற்றவர்கள் உரியவரின் அனுமதியின்றிப் பிரதிபண்ணுவதைத் தடுக்கும் விசேட சட்டம் மூலம் பதுகாக்கப் படுமொன்றாகும். நாம் ஒவ்வொருவரும் எமது சொந்த வாழ்க்கை முறைக்கு உரிய வர்களாக இருக்கின்ற அதேவேளை கலை, விஞ்ஞானம் மற்றச் செயற்பாடுகளின் மூலம் கிடைக்கப்பெறும் நன்மைத் தனங்களை அனுபவிக்கும் உரிமை கொண்டவர்களா வோம்.

28. **நீதியானதும் சுதந்திரமானதுமான உலகு:** எமது நாட்டிலும் உலகமெங்கிலும் எமது உரிமைகளையும், சுதந்திரத்தையும் அனுபவிக்கத்தக்க ஒழுங்கு முறை இருக்க வேண்டும்.

29. **பொறுப்புணர்வு:** மற்றவர்கள் மட்டில் எமக்குக் கடமைகள் உண்டு. அவர்களது உரிமைகளையும், சுதந்திரத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

30. உங்கள் மனித உரிமைகளை யாரும் பறித்துவிட முடியாது.

இந்த முப்பது மனித உரிமைகளும் எல்லா நாட்டிலும் எல்லா நேரத்திலும் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதில்லை. ஆட்சிபீடம் ஏறும் ஆட்சியாளர்கள், அடக்கு முறைகளுக்கெதிராகப் போராட முற்படுபவர்கள், குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் தம்மை உட்படுத்திக்கொள்பவர்கள், தம் எண்ணங்கள் நிறைவேற இவற்றை மீறுவதற்குத் தயங்குவதேயில்லை.


- தொடரும்......




ஆர்ஜென்டினா நாட்டில் திருத்தந்தை பிறந்து வளர்ந்த வீட்டை வரலாற்றுத் தலமாக அறிவித்துள்ளனர். அவர் திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து அவரது வீடு சுற்றுலாப் பயணிகளும், கத்தோலிக்கர்களும் விரும்பிச் செல்லும் இடமாக மாறி வருகின்றது என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிவித்தல்களைத் தாங்கிவரும் பத்திரிகை 'வர்த்தமானப் பத்திரிகை' என அழைக்கப்படும். இதனுடைய முழுப் பெயர், 'இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை'.

ஆனால், கணிசமானோர் இதனை 'வர்த்தமானி' என்றே பிழையாகக் குறிப்பிடுகின்றனர். ஏனென்று தெரியவில்லை. ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் 'லேக்கவுஸ்' பத்திரிக்கைகளுடன் (தினகரன், திவயின) இலவச இணைப்பாக இவை வெளியிடப்படுகின்றன. தமிழ், சிங்களப் பதிப்புகளாக மட்டும் வெளியிடப்படுகின்றன. வெள்ளிக்கிழமைகளில் பகிரங்க விடுமுறை தினமாக இருப்பின் வியாழக்கிழமைகளில் வெளிவரும்.

முன்னர் அரசாங்க அச்சகத்தால் மட்டும் புத்தக வடிவில் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகை மும்மொழிகளிலும் வெளிவந்தது. தபாலகங்கள், நூலகங்கள், அரச திணைக்களங்களில் அவை கிடைக்கும். சந்தா கட்டினால் வீடுகட்கும் வரும். ஆனால், நீண்டகாலம் எடுக்கலாம். சில வேளைகளில் வேலைவாய்ப்பு விண்ணப்பங்களின் கால எல்லை முடிவடைந்த பின்னர்தான் 'கெசட்' வந்துசேரும். அவ்வாறான புத்தக வடிவில் இப்போதும் வெளிவருகின்றது.


ஆனால், இப்போது சுடச் சுட தினகரனுடன் வெளிவருகின்றது. தமிழ் சிங்களப் பதிப்புகளில் மொழிபெயர்ப்புகளில் வேறுபாடுகள் காணப்படின் சிங்களப் பதிப்பே இறுதியானதாக ஏற்றுக் கொள்ளப்படும்.

இவற்றைத் தவிர அவ்வப்போது விசேட வர்த்தமானப் பத்திரிகைகளும் வெளியிடப்படும். விசேட சட்டங்கள், ஏற்பாடுகள் என்பனவற்றை தாங்கி அவை வரும். அவை தினகரனுடன் வரா.

பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இருந்து வர்த்தமானப் பத்திரிகை வெளிவருகின்றது. உதாரணமாக 2014ம் ஆண்டு மே மாதம் 23ம் திகதி வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட வர்த்தமானப் பத்திரிகையின் இலக்கம் 1864 ஆகும்.

சாதாரணமாக வரும் வர்த்தமான பத்திரிகையில் பகுதி I: தொகுதி (II அ) - விளம்பரங்கள் : என்னும் பகுதியில் பதவிகள் - வெற்றிடம், போட்டிப் பரீட்சைகள் என்பன தொடர்பான விபரங்கள் காணப்படும்.

பகுதி I : தொகுதி (II ஆ) - விளம்பரங்கள் : என்னும் பகுதியில் ஏல விற்பனை, குத்தகை, உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல் போன்ற பகுதிகள் காணப்படும். பகுதி I : தொகுதி (I) - பொது : என்னும் பகுதியில் அரசாங்க அறிவித்தல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.




இணையத் தளத்திலும் வர்த்தமானப் பத்திரிகையைப் பார்வையிடலாம். தேடல் இயந்திரங்களில் (உதாரணம் கூகுள்) Gazette என்று அடித்தால் 'டெயிலி நியூஸ்' ஆவணப் பக்கம் வரும்'. இதில் என்ன விசேடமென்றால் பல ஆண்டுகட்கு முன்னைய பதிப்புகளையும் பார்வையிடலாம். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இயேசு!

பைந்தமிழ்க் குமரன் டேவிட்

அடிவானில் இருள் கவியத் தொடங்கிவிட்டது. மங்கிய அந்தி நேரம். கிறீச் என்ற ஒலியுடன் முன் கேற் திறந்த சத்தம் கேட்டு மரியரெட்ணம் நிமிர்ந்து பார்த்தான். மெல்ல மெல்ல அடி வைத்து அந்த மனிதர் நடந்து வந்து அவனுக்கு முன்னால் ஒதுங்கி நின்றார். அந்த முகத்தில் அமைதி குடிகொண்டிருந்தது. கண்களில் கருணை தவழ்ந்தது. சாந்தமும் ஒளி வசீகரமும் இழையோடிக் காணப்பட்டது, சோர்வாயிருந்தார்.

சுமார் முப்பது வயதிருக்கும். முகத்தில் விடுபடமுடியாத பல வேதனைக் கோடுகள் படிந்து கிடந்தன. நீளமான சட்டையொன்றை அணிந்திருந்தார். அதுவும் கசங்கிக் கிடந்தது. இரண்டு கைகளிலும் கால்களிலும் துணியால் சுற்றிக் கட்டியிருந்தார். அவற்றில் இரத்தக் கறை தெரிந்தது.



"இஞ்ச ஒருவரும் இல்ல போங்க .... போங்க ....." என்றான் மரியரெட்ணம். ஏதோ சொல்ல வாய் திறந்தார்.

"எத்தின தடவை சொல்லுறது ... பெண்சாதியும் வெளியில போயிருக்கா ... போங்க .... போங்க ...." உரத்த தொனியில் கத்தினான். கத்தியதோடு வேகமாக எழுந்து வராந்தாவைத் தாண்டி முன் கதவை அடித்துச் சாத்திவிட்டு மண்டபத்தினுள் போனான். யன்னல் கிறில்களினூடு திரும்பிப் பார்த்தான். அந்த மனிதர் அதே சோர்ந்த நடையுடன் மெல்ல நடந்து செல்வது தெரிந்தது. நிம்மதியை உணர்ந்தான்.

பொழுது சாய்ந்து விட்டது. இன்னமும் மனைவியையும் மகளையும் காணவில்லை. எரிச்சல் வந்து அலைக்கழித்தது. கவலையும் கூட அப்பிக்கொண்டது. நாற்காலியில் அமர்ந்தபோதுதான் அருகில் ஒருவன் நிற்பதை உணர்ந்தான். திடுக்கிட்டான். கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது.

"நீ .... நீ.... யார் இப்பிடி கேக்காம .... பாக்காம வீட்டுக்குள்ள வந்து நிக்கிறா ..... யாரு நீ....?" கோபமாகக் கொதிப்புடன் கேட்டான்.

"கொஞ்சம் பிந்தித்தான் போனன்" என்றான் அவன்.

காய்ந்து வறண்டுபோன முகம். பரட்டையேறிய தலை, காவி படிந்த பற்கள், அழுக்குச் சட்டை... விகாரமாய்ச் சிரித்தான். திடீரென்று அவன் முகம் இறுகியது.

"கொஞ்சம் முன்னால வந்தாரே ஒரு மனிதர், அவரை ஏன் ஏசித் துரத்திவிட்டாய்?" கோபத்துடன் கேட்டான்.

மரியரெட்ணம் விக்கி விறைத்துப் போனான்.

நாக்கு மேலண்ணத்தோடு ஒட்டிக்கொண்டது. அவன் யார்? இவன் யார்? பதில்கள் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"ஏன் துரத்தினாய்?"
திரும்பவும் கேட்டான்.

"அவனொரு பிச்சைக்காரன், நீயொரு பொறுக்கி ... நீ ... நீ .... அவண்ட கூட்டாளிதானே...?"

"நான் பொறுக்கிதான் .... அதையும்விட துரோகி ..... பெருந்துரோகி .... ஆனா அவர் பிச்சக்காரனில்ல பெரும் பணக்காரர்"
என்றான்.
இவனென்ன பைத்தியமா.... ஒன்றுக் கொன்று முரணாகப் பேசுகிறானே.

"இந்தா பார்... இதப் பார்...."
என்று கைகளைக் காட்டினான் ஒரு கையில் ஒரு பத்திரம், மறு கையில் ஒரு முடிச்சு இருந்தது.

"அந்த அப்பாவியின் விலையில் வாங்கியது இந்த மண், இது அதற்கான பத்திரம்"
என்றான். முடிச்சை அவிழ்த்தான். செந்நிற மான மண் துணிக்கைகள் தெரிந்தன. வாடிச் சுருங் கிய முகத்துடன் கவலையோடு அந்த மண்ணைப் பார்த்தவனின் கண்கள் கலங்கிற்று. இது இரத்த மண். இரத்த நிலத்திலிருந்து எடுத்துவந்தேன். இந்த இரத்த நிலத்திற்குக் கொடுத்த விலை நட்பின் விலை, காட்டிக்கொடுப்பின் விலை முப்பது வெள்ளிகள்.

"இதோ, என் கழுத்தைப் பார்"
என்றான். அவன் கழுத்தில் புரிப்புரி யான தழும்பு கன்றிப்போயிருந்தது.

"உலகத்தில் சபிக்கப்பட்டவன் நான். இந்த இரத்த நிலத்தின் சுமையோடு விடுபட முடியாத வேதனைகளோடு அலைந்து திரிகிறேன். என் நிலைமை உனக்கும் வரவேணாம்"
என்று பேசினான்.

"நீ இரத்த நிலத்தைச் சுமந்துகொண்டு திரியிறதுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்....?"
என்று கேட்டான் மரியரெட்ணம்.

முரட்டுத்தனமான ஒரு சிரிப்பு பளிச்சிட்டது அவனிடம். கரகரத்த குரலில் பேசினான்.

"இந்த மண்ணில் விடுதலைக்கென்று புறப்பட்டு மோதிக்கொண்ட குழுக்களில் நீயும் ஒரு குழுவைச் சேர்ந்தவன். பின்னாளில் சீருடைகளின் செல்லப் பிள்ளையாக மாறி முகமூடி தரித்து காட்டிக் கொடுத்தாய். ஆயிரத்தித் தொள்ளாயிரத்தித் தொண் ணூறாம் ஆண்டு சித்திரை மாதம் பதினோராம் திகதி அன்னைபுரத்தைச் சுற்றி வளைச்சி ஆண்களை யெல்லாம் அள்ளிக்கொண்டு போனார்கள். சின்னராசா சேகர் என்றவனைக் குறிவைத்தே அந்தச் சுற்றி வளைப்பு நடந்தது. உன்னைத் தேடியோடி வந்து சின்னராசா, தன்ர மகன் சேகர மட்டும் காப்பாத்தி விட்டுட்டா வீதியோரத்து இருபது பேச் காணியை உனக்கே தாறதாச் சொல்லி கெஞ்சிக் கேட்டார், சத்தியம் செய்தார், நீயும் போனாய், கண்களுக்கு ஒட்டை, கறுப்புத் துணிக் கவசம், தலையாட்டி வேடம். அதோ சின்னராசா சேகர் பின்வரிசையில, மூணாவதாக சிவராசா சேகர் குந்தியிருந்தான். வயது இருபத்தி மூணு. ஏழு மாசத்துக்கு முன்னா லதான் கலியாணம் கட்டியிருந்தான். உன்ர காதுக் குள்ள சேகரைக் காட்டுமாறு ஊதப்பட்டது. நீயும் ஈவு இரக்கம் இல்லாம சின்னராசா சேகருக்குப் பதிலாக சிவராசா சேகரைக் காட்டிக் கொடுத்தாய். ஓரெழுத்து வித்தியாசமான அடையாள அட்டை தானே. உன்ர கண்ணுக்கு முன்னால அவனப் பந்தாடினார்கள். பற்களை உடைத்து நகங்களைப் பிடுங்கி தலைகீழாகத் தொங்கவிட்டு கடைசியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்றிரவு குற்றுயிராக ரயர் போட்டு எரித்தார்கள். தேடப்பட்ட சேகர் வெளிநாடு போய்விட்டான். அந்தத் துரோகத்திற்காக உனக்குக் கிடைத்த நிலம் பற்றித்தான் சொன்னேன். அதுவும் **இரத்த நிலம்தான்.** இப்போது புரிகிறதா.....?

அப்போது மரியரெட்ணத்தின் தலைக்குள் மின்னல் வெட்டின.

"நேற்று நீ சிவன் கோவிலடியில் பார்த்தாயே ஒரு பிச்சைக்காரி, அவள் அப்பாவி சேகரின் மனைவி. அவளோடு ஒட்டிக்கொண்டு ஒல்லியாகக் கிடந்தாளே அவள் வேறுயாருமல்ல, இந்த மண்ணில பிறக்க முதலே, ஒரு துரோகியால அநியாயமாகக் காட்டிக் கொடுக்கப்பட்டு, சித்திரவதைப்பட்டு, கொலை செய்யப்பட்ட ஏழை சேகரின்ர மகள். தலைசாய்க்கக் கூட குடிசையில்லாம தாயும் பிள்ளையும் அலையுதுகள். அதுவும் இரத்த நிலம் தான். நவயுகத்து யூதாஸே என்ன செய்யப் போகிறாய்...?" கத்தினான்.

தொண்டை கட்டிப்போயிருந்தது. ஒரு கையில் இரத்த நிலத்து மண்முடிச்சு. மறுகையில் இரத்த நிலத்தின் பத்திரம். நடந்தான்...., நடந்துபோய் விட்டான்.

தலை சுழன்றது. மரியரெட்ணத்தின் நினைவில் பைத்தியக் கோலத்தில் சேகரின் மனைவி தெரிந்தாள். தகப்பனின் முகம் தெரியாத பிஞ்சு மகள் வாடி வதங்கிய கொடிபோல தாயருகே கிடக்கின்றாள். அவன் தலை வலித்தது. கடந்த வருடம் அந்த இரத்த பூமியில் ஒரு வீடு கட்டியிருந்தான். பால் பொங்கவில்லை. யாரும் இன்னும் குடியிருக்கவில்லை.

கதவு தட்டப்பட்டது. கூடவே,
"அப்பா.... அப்பா...." என்ற குரல்.
நடந்துபோய்த் தாள் திறந்தான். அவனது மனைவியும் மகளும் வேகமாக உள்ளே வந்தனர். வீதியில் நிகழ்ந்த விபத்தொன்றில் மயிரிழையில் தாங்கள் உயிர் தப்பியதை படபடப்புடன் கூறினர். விக்கி வியர்த்துப் போனான். மனைவியின் கைகளைப் பற்றியவன்,

"என்னத் தடுத்திராத, என்னால செய்யக் கூடிய பரிகாரத்த செய்யப்போறன். என்ர மனச் சாட்சியச் சாகடிக்க இனியும் எனக்கேலாது, ஏலாது .... ஏலாது ...."

குமுறிக் குமுறியழுதான்.

"என்ன நடந்தது .... என்ன பரிகாரம் செய்யப்போறீங்க .... யாருக்குச் செய்யப்போறீங்க ....."

அவன் மனைவி பதை பதைப்புடன் கேட்டாள்.

"அது .... அது.... இரத்த நிலம்.... அது நமக்கு வேணாம். அந்த நிலத்தையும் அதில நாம கட்டியிருக்கிற வீட்டையும் அவன்ர பெண்சாதிக்கும் பிள்ளைக்கும் குடுக்கப்போறன். அதுகள் தங்கட சீவியத்தக் கொண்டுபோறதுக்கு என்னால முடிஞ்ச உதவிகளைச் செய்யப்போறன்"

நா தடுமாற மரியரெட்ணம் கூறியபடியே அழுதான்.


அவளிடமிருந்து பாரிய சுமையொன்று விலகிக் காற்றில் பறப்பதைப்போல உணரத் தலைப்பட்டாள்.

"உங்கட விருப்பம் போல செய்யுங்க.... நான் தடுக்கமாட்டன்"

என்று கூறியபோது சொற்கள் உடைபட அவளும் அழுதாள்.

குறும்(புப்)பா – 137

இம்பூதத் தாலான அரியஉயிராம்
ஆறறிவு பெற்றதவன் பேர்மனிதனாம்
உம்பருல கந்தேடி உயரத்தில் பறந்தாலும்
அன்பிலையே லேதுமன அமைதி...?






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இன்று சனிக்கிழமை: அன்ரனுக்குப் பெரியாஸ்பத்திரியில் கிளினிக் நாள். காலையில் சென்று நம்பர் எடுத்து தனது அழைப்பு இலக்கம் வரும்வரை காத்திருந்தார் அன்ரன். அவருக்குப் பதினெட்டாம் இலக்கம். அவரது இலக்கத்தைக் கூப்பிடுவதற்கு இடையில் மேலதிகமாக நான்குபேர் 'செல்வாக்கால்' உள் நுழைந்து வந்துவிட்டார்கள். அன்ரனுக்கு அன்று வேறு வேலை எதுவும் இல்லாததால் பொறுமையாக இருந்தார்.

"பதினெட்டாம் நம்பர் வாங்க...."

அன்ரன் உள்ளே சென்றார்.....

"இந்தாங்க உங்கட கொப்பியும் கார்ட்டும் ..... ஐயாட்ட காட்டுங்க...."

வைத்தியர் அன்ரனை பரிசோதித்தார்.

"பிறசர் ஓ.கே... பிளட் றிப்போட்டும் சரி. மருந்த மீண்டும் ஒழுங்காக எடுங்க ........"

அப்போது, நேர்ஸ் ஒருத்தி வைத்தியரிடம் வந்து, மஞ்சள் நிறத் துண்டொன்றைக் காட்டி,

"சேர் ..... இது நீங்க எழுதுன துண்டு ..... ஆனால் பேசன்ட் பேர் சரியா விளங்கல்ல .... ஒருக்கா பாத்துச் சொல்லுங்க டொக்டர்....." என்றார்.

டொக்டர் துண்டை நன்றாக வாசித்தார் .......



"என்ர எழுத்துத்தான் .... ஆனா எனக்கும் சரியா விளங்குதில்ல ...."

"சேர், பேர் பிழையெண்டா றிப்போட் மாறிப் போயிடும்....."

"உண்மையா சரியா விளங்குதில்ல ..... பரவாயில்ல ..... பாமசிஸ்ட் ஆரிட்டயும் காட்டிப் பாருங்க... வாசிச்சு சொல்லுவாங்க ...."

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அன்ரனுக்கு வியர்க்கத் தொடங்கியது....

"இவங்க தாற மருந்த எப்படியப்பா குடிப்பது....? என்றாலும் விசாரிச்சுப் போட்டுத்தான் குடிக்கணும்...."

என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டார்....

"கடவுளே காப்பாற்று"

◘






— மற்றில்டா இராஜேந்திரம் —

### ஆவணி 01ம் திகதி : புனித அல்போன்சஸ் மரிய லிகோரி



**இ**வர் இத்தாலி நாட்டின் நேபிள்ஸ் நகர்க்கருகிலுள்ள மரியனெல்லா எனும் கிராமத்தில் 1696ம் வருடம் புரட்டாதித் திங்கள் 27ம் நாளன்று பிறந்தார். சிறு பராயத்திலேயே இவருடைய தாயின் இறைபக்தி மிக்க வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்டார். தந்தையின் உதவியினால் கல்வி கற்றார். இவரது புத்திசாலித்தனத்தால் கல்வியில் பெற்ற பல சிறந்த பெறுபேறுகள் மூலம் பதினாறு வயதிலேயே சட்டக் கல்வியை நிறைவு செய்தார். சிறிது காலத்தின் பின் ஒரு சிறு சட்ட நிபுணர்களின் சங்கத்தில் அனுமதி பெற்றார். 1723ம் வருடத்தில் இவர் வழக்காடிய ஒரு வழக்கு தோற்றுப் போய்விட்டது. இச்சந்தர்ப்பத்தை இறைவன், இவரது மனதை உலகின் பாலிருந்து தன்னை நோக்கித் திரும்பப் பயன்படுத்தினார். பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சமயத் துறையினுள் நுழைந்தார். 1726ம் வருடம் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார். பல இடங்களில் ஆர்வமும், பரிசுத்தமும் நிறைந்த இவரது பணியால் கிடைத்த பயன்கள் ஏராளம். 1732ம் வருடம் மகா பரிசுத்த இயேசுவுக்காக ஒரு சபையை உருவாக்க இறைவனால் அழைக்கப்பட்டார். கஷ்டப்படுவோருக்கும், கைவிடப்பட்ட ஆன்மாக்களுக்கும் இரட்சணியம் பெற்றுக் கொடுக்கவே இச்சபை உருவாக்கப்பட்டது. சொல்ல முடியாத கஷ்டங்கள், எண்ணற்ற வாதைகள் மத்தியிலும் இவர் தன் சபையை உருவாக்கி வெற்றிகரமாக இயங்கச் செய்ததன் பயனாக, இறைவனது மகிமைநிறை முடியையும், அதேவேளை சிலுவையையும் பெற்றார். இடைவிடாத இவரது உழைப்பு 1756ம் வருடம்வரை தொடர்ந்தது. இந்த வருடம் புனித அகத்தா மறைமாவட்ட ஆயராக நியமிக்கப்பட்டார். 1775 வரை ஆயர் பணியைத் தொடர்ந்த இவர் தள்ளாத வயதின் காரணமாக ஆயர் பதவியிலிருந்து ஓய்வு பெற்று அவரது மடத்துக்குச் சென்று மரணம் மட்டும் அங்கேயே வாழ்ந்தார். இவரைப் போல சில புனிதர்களே எழுத்தாற்றலில் சிறந்து விளங்கியதைக் காணமுடியும். இவர் மிகப் பிரசித்தி பெற்ற எழுத்தாளராவார். எழுதுவதை இடைநிறுத்தவேயில்லை. இவரது வாழ்வின் இறுதி நாட்கள் கடுமையான துன்பத்தாலும், ஆயர் பதவியிலிருந்து விலகியதால் ஏற்பட்ட வெறுமையாலும், ஏனைய வலிகளாலும் கடந்து சென்றன. ஆனால், அவரது மகிழ்வுமிக்க மரணமானது 1787ம் வருடம் ஆவணிமாதம் 1ந் திகதி நெசரா டி பக்கனி எனுமிடத்தில் நிகழ்ந்தது.

### ஆவணி 02ம் திகதி : புனித யூசிபியஸ்

**சா**ர்டினிய பிரபுக்கள் குடும்பத்தில் பிறந்த இவர் பாலூட்டும் பராயத்திலேயே இவரது தாயாரால் உரோமுக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் கிறிஸ்தவ சமய அறிவைப் பெற்றுக்கொண்டதன் பின் பரிசுத்த பாப்பரசர் புனித சில்வெஸ்டர் திருக்கரத்தால் குருவாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



திருநிலைப்படுத்தப்பட்டார். பின் பியெட் மண்டிலுள்ள வேர்செல்லி சென்று ஆலயக் குருக்களுடன் இணைந்து 340ம் வருடம் ஆயரா கும் வரை பணியாற்றினார். இவரே மேற்குத் திருச்சபையின் முதல் ஆயராக இருந்து மடத்திலிருந்து குருக்களை ஒன்றுபடுத்தியவராவார். ஓர் எதிர்நோக்குடன் திருச்சபையின் சட்டங்களைக் கடைப்பிடித்து வாழ்ந்த தனது குருக்கள் சமூகத்துடன் ஜீவித்தார். அதே வேளை, இவரது வாழ்க்கை பெரும் புகழ்பெற்றது. திருச் சபைக்கு எதிரான கருத்துகளை எதிர்க்கும் நடவடிக்கைக்கு ஆதரவளித்தார். இவருக்கெதிராக 355ம் வருடம் மிலானில் எழுந்த எதிர்ப்பு நிராகரிக்கப்பட்டது. இதன் பலனாக இவர் சக்கரவர்த்தியால் பலஸ்தீனாவுக்கு நாடு கடத்தப்பட்டார். அங்கு ஏரியன்களின் கைகளில் தமது விசுவாசத்திற்காக மிகப் பெருந்துன்பங்களைத் தாங்கினார். அங்கிருந்து கப்படோசியாவுக்கும் பின் எகிப்துக்கும் அனுப்பப்பட்டார். சக்கர வர்த்தி கொன்ஸ்டன்டைன் 361ம் வருடத்தில் இறந்ததும் விடுதலையாகி அலெக்சாந்திரியா சென்றார். அங்கு புனித அத்தனாசியாரைக் கண்டார். அவரோடு கிழக்கின் பல பகுதிகளுக்கும் சென்று பலரை விசுவாசத்தில் ஊன்றச் செய்தார். வேர்செல்லி திரும்பி, வெளி யேற்றப்பட்டிருந்த ஆயர்களில் ஒருவ ரான புனித ஹிலரியைக் கண்டார். இருவரும் மிலானிலிருந்த எரியன் ஆயரை எதிர்த்தனர். 370ம் வருடத்தில் யூசிபியஸ் வேர்செல்லியில் அமைதி யாக இறைவனடி சேர்ந்தார்.

❖



## சரிசெய்ய முடியாத இழப்பு

இன்று உலகில் 4 முதல் 6 வீதமான வயதானவர்கள் வீடுகளில் அவமதிக்கப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. பல நாடுகளில் வயதானவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்துவரும் நிலையில் இந்த மூத்த குடிமக்கள் அனுபவிக்கும் உரிமை மீறல்கள் அதிகரிக்கும் என்ற அச்சமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதுபற்றி கருத்துத் தெரிவித்துள்ள திருத்தந்தை,

"சில நேரங்களில் நாம் வயதானவர்களை ஒதுக்கிவைக்கின்றோம். ஆனால், அவர்கள் விலைமதிப்பில்லாச் சொத்து. அவர்களை ஒதுக்கிவைப்பது அநீதியானது, மற்றும் சரிசெய்ய முடியாத இழப்பாகும்" என்று தெரிவித்துள்ளார்.

## குடும்ப அமைப்பை பாதுகாப்பது நமது கடமை!



இறைவனின் உயர் மதிப்பைப் பெற்றுள்ளது குடும்பம். எனவே, அது அனைவராலும் உயர்வாக மதிக்கப்பட வேண்டும் என்று குடும்பத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட ஆசிய கத்தோலிக்கக் கருத்த ரங்கொன்றில் கூறப்பட்டது.

மனித குலத்தின் வருங்காலம் குடும்பம் வழியாகத் தொடர்வதையே இறைவன் விரும்பு கிறார் என்பதால், குடும்பங்களைப் பாதுகாப்பதும், வளமாக்குவதும், முன்னேற்றுவதும் நம் கடமை என்று இக்கருத்தரங்கின் இறுதி அறிக்கையில் பிலிப்பைன்ஸ் நாட்டின் ஓய்வுபெற்ற ஆயர் Tரெடேரே பெக்கானி அவர்கள் கூறியுள்ளார்.

✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுவர்களுக்கு மட்டும்

முடிவுத் திகதி 31.08.2014

பரிசுப் போட்டி

# விவிலியம் கற்போம் - 134

## யோசுவா : 13ம், 14ம் அதிகாரங்கள்

**(பொருத்தமான சொற்களைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

யோசுவா வயதாகி முதுமையடைந்தார். ஆண்டவர் அவரிடம், "உனக்கு வயதாகி, நீ முதுமை அடைந்துவிட்டாய். இன்னும் உடைமையாக்க வேண்டிய நிலம் ஏராளமாக உள்ளது. எஞ்சியுள்ள நிலங்கள் இவையே; பெலிஸ்தியர், கெசூரியன் எல்லைப் பகுதிகள், எகிப்துக்கு எதிரிலுள்ள ...................... வடக்கில் எக்ரோன் எல்லைவரை, கானானியருடையதாகக் கருதப்பட்ட காசா, அஸ்தோத்து அஸ்கலோன், காத்து, எக்ரோன் ஆகிய பகுதிகளின் ஐந்து பெலிஸ்திய மன்னர், மற்றும் அவ்வாயர், தெற்கிலிருந்து கானான் நாடு முழுவதும்; சீதோனியருக்குச் சொந்தமான மெயாரா, அபேக்கு வரையிலும் உள்ள பகுதிகள் கெபாலியின் நாடு ...................... முழுவதும் எர்மோன் மலையின் கீழ் கதிரவன் உதிக்கும் பாகால் காதிலிருந்து ஆமாத்துக் கணவாய் வரையுள்ள பகுதியும், லெபனோனிலிருந்து மிஸ்ரபோத்து மயிம் வரையுள்ள அனைத்து மலைவாழ் மக்கள், அனைத்து சீதோனியர் - இவர்களை இஸ்ரயேல் முன்னிலையில் நானே வெளியேற்றுவேன். நான் உனக்குக் கட்டளையிட்டபடி நீயும் அதை ...................... உடைமையாகக் கொடு. இப்போது இந்நாட்டை ஒன்பது குலங்களுக்கும், மனாசேயின் பாதிக் குலத்திற்கும் உடைமையாகக் குறித்துக் கொடு" என்றார். இதன்படி யோர்தானுக்குக் கிழக்கேயுள்ள பகுதிகள் ரூபனுக்கும், காத்துக்கும், மனாசேக்கும் வழங்கப்பட்டன. அவ்வாறே ...................... மேற்கேயுள்ள பகுதிகள் இவையே. இவற்றைக் குரு எலயாசர், நூனின் மகன் யோசுவா, குலங்களின் தந்தையர்களின் தலைவர்கள் ஆகியோர் இஸ்ரயேல் மக்களுக்கு உடைமையாக அளித்தனர். மோசேயின் மூலம் ஆண்டவர் கட்டளையிட்டபடி ...................... குலங்களுக்கும், அரைக் குலத்திற்கும் யோர்தானுக்கு அப்பால் உடைமை அளித்தார். லேவியருக்கு உடைமை அளிக்கப்படவில்லை. ஆனால், அவர்கள் தங்குவதற்கு நகர்களும், கால்நடைகளுக்கும் மற்ற உடைமைகளுக்கும் ...................... நிலங்களும் தரப்பட்டன. யூதாவின் மக்கள் கில்காலில் யோசுவாவிடம் வந்தனர். கெனிசியனும் எபுன்னேயின் மகனுமான காலேபு அவரிடம், ஆண்டவரின் மனிதரான மோசேயிடம் காதேசு - பர்னேயாவில் என்னைப் பற்றியும் உன்னைப் பற்றியும் கூறிய வார்த்தை உனக்குத் தெரியும். நான் நாற்பது வயதாக இருக்கையில் ...................... என்னைக் காதேசு பர்னேயாவிலிருந்து நாட்டை உளவறிய அனுப்பினார். திரும்பி வந்து என் மனதில் பட்டவற்றை அவருக்குத் தெரிவித்தேன். நான் முற்றிலும் ஆண்டவரைப் பின்பற்றினேன். மோசே, "நீ உன் கடவுளை முற்றிலும் பின்பற்றியதால், உன் காலடிபட்ட நிலத்தையெல்லாம் உறுதியாக உனக்கும், உன் மக்களுக்கும் என்றும் உடைமையாக ...................... என்று எனக்கு ஆணையிட்டுக் கூறினார். இதோ! அதுபோல் இந்த நாற்பது ஆண்டுகளாக இதுவரை ஆண்டவர் என்னை உயிருடன் வைத்துள்ளார். இதை ஆண்டவர் மோசேயிடம் கூறியபோது இஸ்ரயேலர் பாலைநிலத்தில் பயணஞ் செய்துகொண்டிருந்தனர். இப்போது நான் எண்பத்தைந்து ...................... . மோசே என்னையனுப்பிய நாளில் வலிமையுடன் இருந்ததுபோல் இப்போதும் உள்ளேன். ஆண்டவர் கூறியதுபோல எனக்கு இந்த மலைநாட்டைக் கொடு. அங்கே ஆனாக்கியர் இருக்கின்றனர். ஆண்டவர் என்னோடு இருப்பார். நான் அவர்களை துரத்தியடிப்பேன்" என்றார். யோசுவா ...................... மகன் காலேபுக்கு ஆசி வழங்கி எபிரோனை வழங்கினார். ஏனெனில் அவர் இஸ்ரயேலின் கடவுளை முற்றிலும் பின்பற்றினார். முன்னாளில் எபிரோனுக்குக் கிர்யத்து அர்பா என்ற பெயர் வழங்கியது. அர்பா ஆனாக்கியருள் பெருமை மிக்க மனிதன் ஆவான். நாட்டில் போரின்றி அமைதி நிலவிற்று.

**விடைகள்:** **மேய்ச்சல், மோசே, அளிப்பேன், வயதானவன், எபுன்னேயின், ஒன்பது, யோர்தானுக்கு, இஸ்ரயேலுக்கு, லெபனோன், சீகோரிலிருந்து.**

(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும். பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அறிவை வளர்ப்போம் - 134

## பரிசுப் போட்டி




**(பொருத்தமான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)**

1. பொதுமறை என்று போற்றப்படும் நூல்
(பைபிள் - பகவத் கீதை - திருக்குறள்)

2. 'சிலம்புச் செல்வர்' என அழைக்கப்படும் அறிஞர்
(ரா.பி. சேதுப்பிள்ளை - இளங்கோ அடிகள் - ம.பொ. சிவஞானம்)

3. இலங்கையில் 'சரசவிய' விருது வழங்கப்படுவது
(எழுத்தாளருக்கு - இசைக்கலைஞருக்கு - சினிமாக் கலைஞர்களுக்கு)

4. 'றேனோ வைரஸ்' ஏற்படுத்தும் நோய்
(காய்ச்சல் - வலிப்பு - தடுமன் )

5. 'எலி வளையானாலும் ........................'
(புது வளை வேணும் - பாதுகாப்பு வேணும் - தனிவளை வேணும்)

6. 'இழுக்கா இயன்ற தறம்' என்பதில் வரும் இழுக்கா என்பது,
(எதிர்கால வினையெச்சம் - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் - செய்யா எனும் வாய்ப்பாட்டு வினையெச்சம் )

பெயர் : ..................................................................................

முகவரி: ..................................................................................

..................................................................................

அனுப்பவேண்டிய முகவரி:
**விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்– 134**
**தொண்டன்**
**அ. பெ. எண் – 44**
**மட்டக்களப்பு.**

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:
..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# போட்டி முடிவுகள்...

## விவிலியம் கற்போம் - 132 விடைகள்

நாபோத்தேரில், தேர்களும், குதிகால், மிஸ்ரபோத்துமையும், ஆட்சேர், ஆண்டவரின், கொன்றனர், கோசேன், கிபயோன், அனாக்கியரை

## அறிவை வளர்ப்போம் - 132 விடைகள்

1. 1040.4 மைல்
2. கரப்பந்தாட்டம்
3. இதயம்
4. கி,ஆ,பெ. விசுவநாதம்
5. கல்லும் தேயும்
6. மற்று

## பரிசுகள் : அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

இப்போட்டியில் முதல் வினாவுக்கான விடை தவறாகப் பதிவாகியுள்ளது. சரியான விடை 1040.04 மைல் என்பதாகும். பிழையை ஒரேயொரு போட்டியாளர் மட்டுமே கண்டுபிடித்து எமக்குத் தெரியப்படுத்தியிருந்தார். அவருக்கு எம்முடைய பாராட்டுகள். முதல் வினாவைப் போட்டியிலிருந்து நாம் நீக்கியுள்ளோம்.

**போட்டியின் இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை எழுதி 300/= பரிசு பெறுபவர்**

- ஜெ. தரணியா
  6ம் குறுக்கு,
  சர்வோதய வீதி, சத்துருக்கொண்டான்,
  மட்டக்களப்பு.
- ஹரலீன் பேர்டினன்ஸ்
  129/2, புளோரி வீதி,
  நற்பட்டி முனை,
  கல்முனை.

**போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி 200/= பரிசு பெறுபவர்**

- சுவேஸ்ராசா சுவணியா,
  701/14, தாழையடி,
  தன்னாமுனை.
- ஜோர்ஜ்ராஜா டேனுஜா,
  வட்டை விதானை வீதி,
  பெரிய நீலாவணை - 01B.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 84 முடிவுகள்


**முதலாம் பரிசு - 400/=**
ஐ. ஆன் மிரியாம்,
11/3, 7ம் குறுக்கு,
கல்லடி டச்பார்,
மட்டக்களப்பு.

**இரண்டாம் பரிசு - 300/=**
J. மயூரன்,
கிறிஸ்ரி இல்லம்,
பிரதான வீதி,
தம்பிலுவில் - 01.

**மூன்றாம் பரிசு - 200/=**
லெவ்னி அஷ்ட்ஸ்கோன்
J.20, பனிச்சையடி,
மட்டக்களப்பு.

போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ — ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org